தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௮	மலர்
	ஏவிளம்பி, புரட்டாசி	
௩௩	1957 செப்டம்பர், அக்டோபர்.	௬

கரந்தைத் தமிழ்ச் சங்க
நாற்பத்தாறும் ஆண்டு நிறைவு விழா.

"தேவிகரந் தையஞ் சங்கத்தின் தொண்டு
சேவடி மோதிரம் செந்தமிழ்த் தாயே!"

[கரந்தைக் கவியரசு, அரங்க. வேங்கடாசலம் பிள்ளை.]

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொண்டினைக் கடந்த நாற்பத்தாருண்டுகளாகத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். இவ்வாண்டு புரட்டாசித் திங்கள் ௫, ௬, ௭, ஆகிய நாட்கள் நமது சங்க வரலாற்றிலே புத்தொளி வீசி மிளிரும் பொன்னேடுகளாகும். தமிழகமெங்கணுமிருந்து தண்டமிழறிஞர் பலர் கரந்தை வந்து குழுமினர். அறிஞர்களின் ஆய்வுரையைக் கேட்க மக்கள் பலரும் ஆவலுடன் திரண்டனர். அம் மூன்று நாட்களிலும் எல்லோர் நாவிலும் நற்றமிழ் நடமாட, செவியிலும் செந்தமிழொலி கேட்க, கண்ணிலும் ஒண்டமிழ்க் காட்சிகள் புலப்பட, விழா இனிது நடந்தேறியது.

இவ்விழாவின் மூன்று நாட்களும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், சொல்லின் செல்வர், டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல்., டி. லிட். தலைமை யேற்று விழாவைச் சிறப்புற நடத்திக்கொடுத்தார்கள்.

21–9–57 முதல் நாள்.
நமது சங்கத்தின் 46-ஆம் ஆண்டு நிறைவு விழா.

சங்கக் கல்வி நிலையங்களின் மாணவர்கள் மாலை 4 மணியளவில், ஒப்பனை செய்த சங்க வாயிலின் இரு மருங்கும் அணிவகுத்து

விழாத் தலைவர், சொற்பொழிவாளர் முதலியோரை "தமிழ்த்தாய் வாழ்க" என்று கூறி வரவேற்று நற்றமிழ்ப் பாமாலைகள் பாடியபடி தமிழ்ப்பெரு மன்றத்திற்கு அழைத்துச் சென்றனர். தமிழ்ப்பெரு மன்றத்தின் உள்ளும் புறமும் மக்கள் நிரம்பியிருந்தனர். இறை வணக்கத்தின் பின் தமிழ்த்தாய் வணக்கம் பாட விழா தொடங்கியது. முதற்கண் சங்கத் தலைவர் திரு. ச. சுயம்பிரகாசம் பி. ஏ., பி. எல்., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தம்முரையில் தமிழவேளவர்களது தளராத உழைப்பில் ஊறி வளர்ந்த இச்சங்கத்தைத் தமிழர் யாவரும் புரந்து போற்றுதல் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். அடுத்து நமது சங்க அமைச்சர் திரு. சி. வேதாசலம் பி. ஏ., பி. எல். அவர்கள் ஆண்டறிக்கை படித்தார்கள். பின்னர் விழாத் தலைவர், டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் தம் முன்னுரையில் தமிழவேள் த. வே. உமாமகேசுவரனாரது சிறப்பியல்புகளை விரித்துக்கூறி, இன்று நல்ல தமிழ்ச் சொற்கள் நிலவுவதற்கு அடிநாளிலே வழிகோலியவர்கள் தமிழவேளாவார்கள் என்றும், சங்கத்தைத் தளரவிடாது கண்ணெனக் காப்பது தமிழ்ப் பெருமக்களது கடமையாகும் என்றும் கூறி,

"நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்!"

என்ற பாரதியாரின் பாட்டை எடுத்துக்காட்டிச் சங்கத்திற்கு ஒல்லும் வகையான் எல்லோரும் உதவுமாறு கேட்டுக்கொண்டார்கள். பின்னர், சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறைப் பேராசிரியர் பு. ரா. புருடோத்தம நாயடு அவர்கள் 'மாறன்தூது' என்ற தலைப்பிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர், வித்துவான், க. வெள்ளைவாரணனார் அவர்கள் "வீறதேறுந்தமிழ்" என்ற பொருள்பற்றியும் சொற்பெருக்காற்றினர். நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் நினைவுப் பதக்கம் வித்துவான் இறுதிநிலைத் தேர்வில் முதல்வகுப்பிற்றேறி முதற்றகுதி பெற்ற வித்துவான் கு. கணேசமூர்த்திக்கும், வீரத்திரு. செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் பரிசு, வித்துவான் முதனிலைத் தேர்வில் முதல் வகுப்பிற்றேறி முதற்றகுதிபெற்ற ஆ. சிவானந்தத்திற்கும் விழாத் தலைவர் அவர்களால் சங்கத்தின் சார்பாக வழங்கப் பெற்றன. தலைவர் முடிப்புரைக்குப்பின் குடந்தை இசைத்தமிழாராய்ச்சியாளர் சங்கீதம், திரு. ப. சுந்தரேசன் குழுவினரால் நற்றமிழிசை விருந்து நல்கப்பட்டது.

22–9–57 விழாவின் இரண்டாம் நாள்.

இந்நாள் பேராசிரியர், பெ. சுந்தரம் பிள்ளை அவர்கள் நினைவு விழாவாகக் கொண்டாடப்பெற்றது. விழாத் தலைவர், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளையின் படத்தைத் திறந்துவைத்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறை திரு. T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள், "தமிழிலக்கிய வரலாறு" என்ற பொருள்பற்றியும், சென்னை திரு. சாமி. சிதம்பரனாரவர்கள் "மக்கள் வாழ்வும் இலக்கியமும்" என்ற தலைப்பிலும், சேலம் நகராண்மைக் கல்லூரி விரிவுரையாளர், வித்துவான் திரு. வீ. உலகவூழியர் அவர்கள் "நேர்விடையின்மை யின் நீர்மை" என்ற பொருள்பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினர். தலைவர் முடிப்புரைக்குப்பின் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இயற்றிய 'மனோன்மணீயம்' என்ற நாடகத்தின் சில பகுதிகளை நடித்து மகிழ்வித்தனர்.

23–9–57 வியாழன் மூன்றும் நாள்.

இந்நாள் கலைமகள் விழாவாகச் சிறப்பிக்கப்பெற்றது. குடந்தை சங்கீதம், திரு. ப. சுந்தரேசன் அவர்கள் குமரகுருபரரின் சகலகலா வல்லி மாலையினின்று கலைமகள் வாழ்த்துப்பாடியபின் விழாத்தலைவர் டாக்டர் சேதுப்பிள்ளையவர்கள் தம் முன்னுரையில் கலைமகள் அருளினால் கல்வியறிவு பெருகுமென்ற ஆன்றோர்களின் முடிபைத் தெளிவுற விளக்கினார்கள். அடுத்து மதுரைத் தியாகராசர் கல்லூரிப் பேராசிரியர் சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், "ஆராய்ச்சி வாழ்விற் சில புதிய காட்சிகள்" என்ற தலைப்பிலும், தூத்துக்குடி தமிழறிஞர், திரு. ஏ. சி. பால் நாடார் பி. ஏ., பி. எல்., அவர்கள் "திருக்குறள் அமைப்பு" என்ற பொருள் பற்றியும், குடந்தை இசைத்தமிழாராய்ச்சியாளர் சங்கீதம் திரு. ப. சுந்தரேசன் அவர்கள் "பண்ணென்னும் பாடற்கியைபின்றேல்" என்பதன் இசைத்தமிழ் விளக்கம்பற்றியும் சொற்பெருக்காற்றினர். விழாத் தலைவர் முடிப்புரைக்குப்பின் சங்கத் தலைவர் திரு. ச. சுயம் பிரகாசம் அவர்கள் நன்றி கூறியபின் உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி மாணவியர் நாட்டியமும், மாணவர்கள் 'இராசராசன்' என்ற வரலாற்று நாடகமும் நிகழ்த்தக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் நாற்பத்தாறும் ஆண்டு நிறைவு விழா இனிது நிறைவுற்றது.

வாழி தமிழ்த்தாய்! வளர்க தமிழ்க்கலைகள்
வாழி தமிழவேள் வான்புகழே! — வாழியரோ
தாயாய்ப் புரக்கும் கரந்தைத் தமிழ்ச்சங்கம்
ஓயாப் புகழால் உயர்ந்து.

பொழிற்றொண்டர்.

தமிழ் வாழ்க.

ஏவிளம்பி ஆண்டு புரட்டாசித் திங்கள் ரு, சு, எ [21, 22, 23—9—1957]

ஆகிய நாட்களில் நிகழ்ந்த

கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருவிழாவின்போது தலைமை தாங்கிய

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்

சொல்லின் செல்வர்

டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை பி. ஏ., பி. எல்., டி. லிட்.,

அவர்களுக்கு

சங்கத்தார் உவந்தளித்த

வரவேற்பு வாழ்த்துரை.

சொல்லரிய நுண்மையறந் தூய்மையறி வினிமையெழில் சுவையோ டார்ந்து
வல்லொலிமெல் லிடையொலிகள் வாய்த்துயிர்மெய் யுருத்தாங்கி மரபு சான்ற
மல்லலமைந் தெல்லொளிபோல் மதிதுலங்கி மன்பதைநல் வாழ்வு கொள்ளத்
தொல்லுலகந் தோன்றியவந் நாள்முதலே தென்னவர்தேம் துலங்கத் தோன்றி

மன்னவர்தம் மடிதவழ்ந்து மாண்புலவோர் நாநடந்து வளர்முச் சங்கம்
முன்னியயல் மொழிதுரந்து முடிதாங்கி வீற்றிருந்து மூவா தென்றும்
கன்னியென வந்தருள்முக் கண்ணுடைய செந்தமிழ்த்தாய் கழல்கள் போற்றுா்
அன்னியர்வெம் மொழிவழக்கம் நாகரிகக் கடிபணிந்திங் கழிதல் கண்டே

அத்தனருள் பெற்றஉமா மகேச்வரனூர் அருந்தமிழ்மூ வரசர் போல
இத்தரையில் இசைவிளங்க இளவல்முயன் றியற்றியதோர் சங்கந் தேர்ந்து
முத்தமிழின் சீரறிய முழங்குதுமிந் நாட்டிலென முயன்று நாளும்
புத்தமுதம் புவிநுகர்ந்து பொலியவிய லிசைகூத்தாற் புகழ்மை மேவும்

அறிவுகமழ் கட்டுரைநல் ஆய்வுரைசேர் தமிழ்ப்பொழிலிங் களவில் நூல்கள்
செறியுமொரு நூல்நிலையம் திகழ்புலவர் கல்லூரி திக்கில் லாமல்
வறுமையுறும் மாணவர்க்கோர் இல்லமிரு பள்ளியென வளர்த்த சீர்த்தி
நிறை **கரந்தைத் தமிழ்ச்சங்கம்** நெஞ்சுவப்ப வந்தருளும் நேயஞ் சான்றோய்!

நலமேவு செந்தமிழ்க்கோர் நாவலனே! வருக! தமிழ் நாடு போற்றும்
புலமேவு தமிழ்ப்புலமைப் போரேறே! வருக! தமிழ்ப் புகழை இந்த
நிலமேவ நிகழ்த்திஒளி பொழிநிலவே! வருக! தமிழ் நீர்மை யெல்லாம்
வலமேவ வளர்க்குமொரு வள்ளால்! நற் **சேதண்ணல்!** வருக! வாழ்க!

திருவொடுதென் கால்மணக்கத் தேனருவி தமிழ்கமழும் திருநெல் வேலி
மருவரச வல்லிபுரம் மகிழதமிழ் மரபுயர வளர்ந்து நாளும்
உருவழகு பண்பமைதி ஒழுக்கமுளத் திண்மையருள் உரிமை பூண்டு
பெருகுதமிழ் ஆங்கிலத்தோ டினிதுணர்ந்த பீடுடையோய்! பிறங்கி வாழி!

முற்றியசீர் மோனையுற எதுகையெழில் முகிழ்க்குநடை முதிரப் பேசக்
கற்றபெருங் காட்சியனே! காரெனச்செந் தமிழ்க்கடலைக் கவர்ந்து பெய்யும்
சொற்பொழிவால் தென்னாட்டிற் றூயதமிழ்ப் பயிர்விளைந்து துலங்கு மென்றால்
நிற்பெருமை யாமுரைக்க நிறைவுறுமோ நீணிலத்தில்! நெடிதே வாழி!

தெள்ளுதமிழ் வள்ளுவர்செய் செம்பொருளும் இளங்கோவின் சிலம்பொ லிக்கும்
உள்ளுறையும் ஓர்ந்தமதிக் கம்பனெழிற் காவியத்தின் உணர்வும் தேர்ந்து
விள்ளரிய புலமையினால் வியப்பமைநற் கட்டுரைகள் விளக்க நூல்கள்
கள்ளொழுக எழுதியுளங் கவர்ந்ததமிழ்க் காவல! பல் கலைகள் வல்லோய்!

வாய்ந்தமதி நுண்மையினால் வண்டமிழ்நூற் கடல்திளைத்த வயவர், சட்டம்
ஆய்ந்துணர்ந்த வழக்கறிஞர், அருந்தமிழ்ப்பே ராசிரியர் ஆய்வா ளர்,சீர்
தோய்ந்தசுவை எண்மையெழில் தூயகருத் தோடுரைசெய் சொல்லின் செல்வர்
ஏய்ந்ததமிழ் இலக்கியத்திற் பேரறிஞர் என்றுபுவி இசைக்க வந்தோய்!

தென்னாட்டு மொழிக்குழுவில் சீர்த்திமிகும் உறுப்பினனாய்த் திகழும் செம்மால்!
தன்னாட்டுப் பற்றுடையோய்! தண்டமிழ்த்தாய் தனிமகவாய்த் தாங்கும் மேலோய்!
பன்னாட்டு நூலாய்ந்து பரிசுபொருள் அரசளிக்கப் பைந்த மிழ்க்கே
நின்னீட்டு பொருளுடனே சேர்த்தளித்த பெருந்தகையோய்! நெடிதே வாழி!

பண்டிலங்கைத் தானவர்பாற் பட்டவெழிற் சீதையைத்தன் பக்கஞ் சேர்க்கத்
திண்டிறல்சேர் ராகவற்குச் சேதுதுணை யானதொரு செய்தி கேட்டோம்
மிண்டரொடு வஞ்சரழி வழக்கர்கிறி பேசுமொரு வெறியர் நீக்கித்
தண்டமிழை மீட்பதற்கிச் 'சேது'துணை யாகுமெனிற் றடுப்பார் யாரே?

இங்குவிழாத் தலைமைகொள இசைந்தனை நல் லிசைபெருக இனிதே வாழி!
சங்கமதன் கிளைகளொடு தகுதமிழ வேள்புகழ்போல் தழைத்து வாழி!
பொங்குதமிழ் ஆட்சியொடு தமிழ்நாடு பொலியபணி புரிந்து நாளும்
செங்கதிர்போல் செழுந்தமிழ்போல் சேதண்ணால்! பல்லாண்டு சிறந்து வாழி!

இங்ஙனம்,

கரந்தை,
ஏவிளம்பி புரட்டாசி, ரு.

ச. சுயம்பிரகாசம், பி. ஏ., பி. எல்.
சங்கத் தலைவர்.

கள்ளப்பிரம்பூர் திரு. க. நல்லமுத்து நாட்டார் அவர்கள் மணிவிழா.

தக்கோர் பலரைத் தமிழகம் உய்யத்தந்த தஞ்சைமா நகரைச் சார்ந்துள்ள கள்ளப்பிரம்பூரில் 4—7—1897ல் தோன்றிய பெருநிலக் கிழாரும், அரசியல், சமூகத் தொண்டரும், தமிழ்ப்பணியாளரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வினைக்குழு உறுப்பினருமான திருவாளர் க. நல்லமுத்து நாட்டார் அவர்கள் தம் அறுபதாண்டு நிறைவை 4—7—1957ல் தம் இல்லத்தே சுற்றமும் நட்பும் சூழ்ந்து உவப்பக் கொண்டாடினுர்கள். அதுகாலை நம் சங்கத்தார் அவ்விழா விற் கலந்துகொண்டு மலர்மாலை சூட்டித் தம் வாழ்த்துரையைத் தெரிவித்து மகிழ்ந்தனர்.

பின்னர் நாட்டார் அவர்களின் நண்பர்களும் உறவினர்களும் அன்னருக்குச் சிறந்த முறையில் மணிவிழா நிகழ்த்த எண்ணி ஒரு குழுவை அமைத்து விழாவை 21—9—57ல் கரந்தைத் தமிழ்ச்சங்கப் பெருமன்றத்தில் தஞ்சை நகராட்சி மன்றத் தலைவர் திரு. A. Y. S. பரிசுத்த நாடார் M. L. A. அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடினுர்கள். அதுபோது நம் சங்கத் தலைவர் மலர்மாலை அணிவித்துப் பாராட்டி, சங்கத்தின் சார்பாக ஒரு வாழ்த்திதழ் வழங்கினுர்கள். அதனுள்

"செந்தமிழ்க்கோர் புரவலராய்த் திகழ்ந்த உமா மகேச்வரனின் சீர்மை தாங்கி
வந்தருளெம் வள்ளால்! நம் வாழ்வு தமிழ் வளர்ச்சியுறும் வரம்பே என்ற
சிந்தனையால் தொண்டாற்றச் செயற்குழுவிற் சேர்ந்தனையே திசைகளெட்டும்
வந்தனைசெய் அளவில்தமிழ் வளரஅரும் பொருள்வழங்க வந்தோய் வாழி!

என்பன போன்ற அவர் தம் சிறந்த பண்பு நலன்களை எடுத்துப் போற்றி வாழ்த்தினுர்கள். பாராட்டுக் குழுவினரால் நாட்டார் மணி விழா மலர் ஒன்று வழங்கப்பெற்றது. பின்னர் திரு. சாமி சிதம்பரனுர், திரு. P. S. வேங்கடகிருட்டினப் பிள்ளை, திரு. S. ராமச்சந்திரப் பத்தர், B. A. திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார், B. A., L. T., புலவர், பொன்னண்ணு களத்தில்வென்ருர், புலவர், R. ஏகாம்பர நாதன், வித்துவான். கு. சின்னையன், திரு. K. S. சிவவடிவேல் உடையார், புலவர், குழந்தையா முதலாயினேர் நாட்டார் அவர் களின் பண்புகளையும், பணிகளையும் பற்றி எடுத்துரைத்து வாழ்த் தினுர்கள். தம்மைப் பாராட்டியவர்களுக்குத் திரு. நாட்டார் அவர் கள் நன்றி தெரிவிக்க விழா இனிது நிறைவேறியது. திரு. நாட்டார் அவர்கள் நாட்டிற்கும், நம் தமிழ் மொழிக்கும் நல்ல பல பணிகளைச் செய்து எல்லா நலன்களுடனும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த் துகிருேம்.

பொழிற்றெண்டர்.

[சென்ற இதழின் தொடர்ச்சி]

தஞ்சாவூர் இராச ராசேச்சரக் கல்வெட்டு வரலாறு.

வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார்,

ஆராய்ச்சியாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

மேலும்,

"நீடிய வெண்டிசை நீழல்வாய்ப்ப
நேரிய **தெக்கிண மேருவென்னப்**
பீடிகை தில்லை வனத்தமைத்த
பெரியபெருமானை வாழ்த்தினவே"

என்னும் தக்கயாகப்பரணி தாழிசையால் (773) இரண்டாங் குலோத் துங்க சோழன் தில்லைவனத்தில் தட்சிணமேருவென்ன விமானம் அமைத்த செய்தி பெறப்படுகின்றது. பீடிகை என்பதற்குப் பலி பீடம், விமானம் என்னும் பொருள்கள் உண்டென்பதைக் காலஞ் சென்ற மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயர் அவர்கள் அந்நூற் பதிப்பில் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். இது முதலாம் இராச ராசசோழன் காலத்துக்குப் பிற்பட்ட சான்று ஆயினும், சிதம்பரத்தில் விமானத்திற்குத் தக்கிணமேரு என்று பெயர் வைக்கப்பட்டிருக்கும் வழக்கை எடுத்துக் காட்டுவதாகும்.

முதலாம் இராசராச சோழனது திருத்தமக்கையாரும் தேவிமார்களும், அரசியல் அலுவலாளர்களும் எழுந்தருளி வித்த திருமேனிகளும் பிரதிமங்களும்:-

இராசராசதேவர் **திருத்தமக்கையார்**, வல்லவரையர் வந்திய தேவர் மகாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார், இத் திருக்கோயிலில் தம் தந்தையாராகிய பொன்மாளிகைத் துஞ்சிய தேவர் (இரண்டாம் பராந்தக தேவர், தமது தாயாராகிய வானவன் மாதேவியார், தட்சிணமேரு விடங்கனின் பிராட்டியார் உமாபரமேஸ் வரியார், தஞ்சை விடங்கரின் பிராட்டியார் உமாபரமேஸ்வரியார் இவர்களின் திருமேனிகளையும்;

இராசராசதேவர் **தேவிமார்களில்**, ஒலோகமாதேவியார் பிச்ச தேவரையும்; திரைலோக்கிய மாதேவியார் கல்யாணசுந்தர தேவர் இவரது பிராட்டியார் இவர்களையும்; அபிமானவல்லியார் இலிங்க புராணதேவர், பிரமன், விஷ்ணு இவர்களையும்; சோழமாதேவியார் இடபவாகன தேவர் இவர்தம் பிராட்டியார் உமாபரமேஸ்வரியார் இவர்களையும்; பஞ்சவன் மாதேவியார் தஞ்சையழகர், இவர் பிராட் டியார் உமாபரமேஸ்வரியார், கணபதியார், பதஞ்சலியார், இவர் களையும்; இலாடமாதேவியார் பாசுபதமூர்த்தியையும், பிருதுவிமா தேவியார் ஸ்ரீகண்டமூர்த்திகளையும்;

இராசராசதேவர் **அரசியல் அலுவலாளர்களில்** அதிகாரிகள் காஞ்சிவாயிலுடையான் உதைய திவாகரன் தில்லையாளியாரான

இராசராச மூவேந்த வேளார் க்ராதார்ஜுந தேவரையும்; இராசராச தேவர் பெருந்தரம் வேளான் ஆதித்தனுன பராந்தகப் பல்லவரையர் உமாசகிதர் இவர்தம் பிராட்டியார், சுப்பிரமணிய தேவர், கணபதியார் இவர்களையும்; இராசராச தேவர் பெருந்தரம், உய்யக்கொண்டார் வள நாட்டு வெண்ணுட்டுக் கேரளாந்தகச் சதுர்வேதிமங்கலத்து நராக்கண் ஸ்ரீ கிருஷ்ணன் மும்முடிசோழ பிர்மாதிராயன் அர்த்தநாரீஸ்வரரையும்; இராசராச தேவர் சிறுதனத்துப் பெருந்தரம் கோவன் அண்ணுமலையான கேரளாந்தக விழுப்பரையன், பிருங்கீசர், சூரிய தேவர் இவர்களையும்; ஸ்ரீ காரியம் செய்த பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான் திருஞான சம்பந்த அடிகள், திருநாவுக்கரைய தேவர், நம்பி ஆரூரனுர், நங்கை பரவையார், முதலாம் இராசராச சோழர், இவரது தேவியார் ஒலோக மாதேவியார், 'தத்தா நமரே என்ற மிலாடுடையார்' (மெய்ப்பொருள் நாயனுர்) சிறுத்தொண்ட நம்பி, திருவெண்காட்டு நங்கை, சீராள தேவர் இவர்கள் பிரதிமங்களையும்; சந்திரசேகர தேவர், க்ஷேத்திர பால தேவர் இவர்களின் திருமேனிகளையும்; ஈராயிரவன் பல்லவரையனுன மும்முடி சோழ போசனுன உத்தமசோழப் பல்லவரையன் சண்டேசுவர தேவரையும்; எழுந்தருளுவித்துள்ளனர்.

கணேசர்.

நிர்த்தனம் செய்யும் கணபதியார் இருவர், உட்கார்ந்திருக்கும் கணபதியார் மூவர், நிற்கும் நிலையிலிருக்கும் கணபதியார் இருவர் ஆக எழுவர் திருமேனிகளை, முதலாம் இராசராசன் இக் கோயிலில் எழுந்தருளிவித்துள்ளான். இவர்களேயன்றி, ஆலயத்துப் பிள்ளையார், பரிவார ஆலயத்துப் பிள்ளையார் இவர்களைப் பற்றியும் குறிப்புக்கள் இருக்கின்றன. இவர்களுள், ஆலயத்துப் பிள்ளையார் இராசராசேச்சரக்கோயிலிலும், பரிவார ஆலயத்துப் பிள்ளையார் பிராகாரத்தில் இருக்கும் பிள்ளையாரையும் குறிப்பதாகக் கொள்ளலாம். பிராகாரத்தில் இருக்கும் இப்பிள்ளையார்கோயிலை, தஞ்சையை ஆண்ட மகாராட்டிர மன்னராகிய சரபோஜி மகாராசர் சகம் 1723இல் பழுது பார்த்ததோடு இக்கோயிலுக்கு அர்த்த மண்டபம், மகா மண்டபம் இவைகளையும் புதிதாகக் கட்டியுள்ளார். சகம் 1723 என்பது கி. பி. 1801 ஆகும். எனவே இம்மண்டபங்கள் கட்டப் பெற்று இற்றைக்கு 156 ஆண்டுகள் ஆகின்றன. இச்செய்திகளை இக்கணபதி கோயிலிலுள்ள படிக்கட்டுகளின் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

சுப்பிரமணியர் கோயில்.

மேற்குறித்த சரபோஜி மகாராசர் சகம் 1723இல் இக் கோயில் மகா மண்டபத்தின் முன்புள்ள படிக்கட்டுகளைப் புதிதாகக் கட்டியுள்ளனர்.

வாயில்கள்.

இக் கோயில் முதற் கோபுர வாயிலுக்குக் **கேரளாந்தகன்** திருவாசல் என்றும்; இரண்டாம் கோபுர வாயிலுக்கு **இராசராசன்**

திருவாசல் என்றும், தெற்குத் திருவாசலுக்கு **விக்கிரம சோழன்** திருவாசல் என்றும் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. இவைகளுள் பின்னது விக்கிரம சோழனால் கட்டப் பெற்றதோ அல்லது இவன் பெயரால் வைக்கப்பெற்றதோ என்று துணிந்து கூறுவதற்கு ஆதார மில்லை. இப் பெயர்கள் அனைத்தும் வாசல்களின் மேல் பகுதியில் செதுக்கப்பட்டுள்ளன.

தீர்த்தம்.

இக்கோயில் வடக்குப் பிராகாரத்தில் திருக்குளம் ஒன்று இருந்தது. அதற்கு **மண்டூக தீர்த்தம்** என்று பெயர். அது சகம் 1724 இல் அதாவது கி. பி. 1802இல் சரபோஜி மன்னரால் ஒரு கிணறு வடிவமாகக் கட்டப் பெற்றுள்ளது.

திருச்சுற்று மாளிகையைக் கட்டியவர்.

இக் கோயில் திருச்சுற்று மாளிகையைக் கட்டியவர் சோழமண்டலத்து உய்யக்கொண்டான் வளநாட்டு அமண் குடியான கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ கிருஷ்ணன் இராமனான மும்முடி சோழ பிர்மராயர் ஆவர்.

அம்மன் கோயிலைப் பற்றிய செய்தி.

திரிபுவனச் சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான், இக் கோயிலில் உலகு முழுதுடைய நாச்சியாரை எழுந்தருளிவித்து, அவர்க்கு அமுதுபடி உள்ளிட்டு வேண்டுவனவற்றிற்கு அருமொழி தேவ வளநாட்டு மேல்கூறுவிடைய புரப் பற்றிலே கொட்டகர்க்குடியிலே பதின்வேலி நிலத்தை இறையிலியாகக் கொடுக்கப் பெற்ற செய்தியை அம்மன் கோயில் கல்வெட்டு அறிவிக்கின்றது. இங்குக் குறிக்கப்பெற்ற திரிபுவனச் சக்கரவர்த்தி சோழ மன்னனோ அல்லது பாண்டிய மன்னனோ என்று துணிந்து கூறமுடியவில்லை. ஏனெனில் இரு வம்சத்தார்களும், திரிபுவனச் சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் என்ற பட்டங்களைச் சூடிவந்தார்கள். ஆதலின், கோநேரின்மை கொண்டான் என்பது தனக்கு ஒப்பார் எவரும் இலர் என்ற பொருள் தரும். எனவே அம்மன் திருப்பெயர் **உலக முழுதுடைய நாச்சியார்** என்பதாகும். அம்மன் கோயிலுக்கு முன்புள்ள மண்டபங்களுக்கு மல்லப்ப நாயக்கர் மண்டபம், மூர்த்தி அம்மன் மண்டபம் என்னும் பெயர்கள் வைக்கப்பெற்றிருந்தன. இவைகளை எல்லாம் அம்மன் கோயிலின் மேற்குப்புறச் சுவரிலுள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

திருவிழாக்கள்.

இத்திருக்கோயிலில் மாதந்தோறும் சதயத் திருவிழா, கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாள் திருவிழா, மாதந்தோறும் சங்கிராந்தி விழா, ஆட்டைத் திருவிழா அல்லது பெரிய திரு உத்ஸவம் இவைகள் நடைபெற்று வந்தன. இவைகளுள் சதயத்

நவமணித் தேர்ச்சியில் தமிழரது கலையுணர்ச்சி.

[K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.]

நல்ல குணமுடைய மணிவயிரம், வாழ்க்கையை வலிவும் பயனு முடையதாய் விளக்கஞ்செய்து, அணிபவரை மெய்க்கினிதாய் செவ்விய வாழ்வில், இருத்திவைக்கும். பொதுவாக, வயிரம் இருமூன்று மூலையுடையதாயிருத்தல் நன்று. மேடு பள்ளமுமின்றி இரு நான்கு மூலையுடையதாயிருத்தலும் நலமே. கனமின்றி வளரொளியுடன் இருத்தல் வேண்டும். நலங்கேழ் ஒளி மலிந்து நுனி கூர்மையுடைய தாயிருக்கவேண்டும். மற்றும், வீறு, வளம், தெளிவு நலன்கள் யாவும் எழில் கனியத் திகழும் எழுச்சியுடையதாயிருத்தல் வேண்டும். இத்தகைய செழுமையினையுடைய வயிரத்தை அணிபவர் நல்லியல் பும் உணர்வாற்றலும் மிக்கராய் விழுப்பேறுகளுடன் நோயின்றி யியன்ற யாக்கையொடு செம்மாந்து செழித்து வயங்குவர். சுக்கிர தசையுடையார் விழுப்பம் வாய்ந்து வளமுற விளங்குவரென்பது சோதிடக் கூற்றுதலின் வயிரத்திற்குரிய தெய்வம் சுக்கிரன் என்பது ஈண்டு நினைவுகூரற்பாலது.

(171-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவிழா என்பது, முதலாம் இராசராச சோழன் பிறந்த சதய நட்சத்திரத்தில் மாதந்தோறும் நடத்தப்பெறும் விழாவாகும். ஆட்டைத் திருவிழா என்பது ஆண்டு தோறும் நடத்தப்பெறும் பெரிய திருவிழாவாகும். இது வைகாசி மாதத்தில் நடைபெற்றுவந்தது. இவ்விழாக் காலங்களில் இராசராச நாடகம் நடத்தப்பெறுவது உண்டு. "உடையார் வைகாசிப் பெரிய திருவிழாவில் ராஜராஜேஸ்வர நாடகமாட நித்தம் நெல்லுத் தூணியாக நூற்றிருபது கலம்" என்னும் 'திருமருவிய செங்கோல் வேந்தன்' எனத் தொடங்கும் கோப்பரபன்மரான உடையார் ராஜேந்திர தேவரின் ஆறும் ஆண்டுக் கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது. அம்மன்னன் காலத்தில் நாடகம் நடித்துவந்தவன் சாந்திக் கூத்தன் திருமுதுகுன்றனை விஜயராஜேந்திர ஆசாரியன் ஆவன். இந்த வைகாசிப் பெருந் திருவிழா ஒன்பது நாட்கள் நடைபெற்றுவந்தன. "பெரிய திரு உத்ஸவம் நாள் ஒன்பதுக்கும்" 'ஆட்டைத் திருவிழா எழுந்தருளு நாள் ஒன்பதும்" என்னும் கல்வெட்டுப் பகுதிகளே சான்றாகும்.

[மிகப் பழங்காலத்தே விழாக்கள் ஏழு நாட்களில் நடைபெற்று வந்தன. "ஏழு நாளும் கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கை வீரட்டனாரே" என்னும் திருநாவுக்கரசர் வாக்கால் புலனாகும்.]

விழாக் காலங்களில் சிவயோகிகளுக்கு அன்னம் அளிக்கப் பெற்றுவந்தது.

[தொடரும்]

இனி வயிரங்களிடத்தில் உறையும் குற்றங்கள் யாவை யென சற்று ஆய்ந்து காண்பேமால்,

'கீற்றுமலஞ் சப்படியே பிளத்தல் கோடி
கெடுதல் கரி துளை விந்து காக பாத
மாற்றருஞ்சீர் தருகோடி முரிதல் தாரை
மழுங்கலிருத் தெனப்பகர்வார் குறையீ ராறும்'

என்பது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.

மற்றும்,

சரை மலங்கீற்றுச் சப்படி பிளத்தல்
துளை கரி விந்து காக பாத
மிருத்துக் கோடிக ளிலாதன முரிதல்
தாரை மழுங்கல் தன்னே
டீராறும் வயிரத் திழிபென மொழிப'

எனும் சூத்திரத்தின் கண்ணும் காணப்படுங் குற்றங்கள் பன்னிரண்டில் கடியப்படும் மிகக் கொடியவை நான்கே. அவை காகபாதம், களங்கம், விந்து, ஏகை என்பன. ஏகை, இரேகை, கீற்று என்பன ஒரு பொருட் சொற்கள். இக்குற்றங்களால் விளையும் பயன் வருமாறு:

[அ] 'காக பாதம் நாகங் கொல்லும்'
[ஆ] 'மலம் பிரியாதது நிலந்தரு கிளைகெடும்'
[இ] 'விந்துசிந் தையிற் சந்தா பந்தரும்'
[ஈ] 'கீற்று வரலினை யேற்றவர் மாய்வர்.!

காக்கையின் கால் உருவம் போன்ற குறியினையுடைய வயிரத்தை அணிபவர் உடல் சிதைந்து பழுதாகிப் போவதல்லாது உயிரின் அறிவு முயற்சிகள் யாவும் அவிந்து அவரது பிறவியும் பாழாய்ப் போகும். செழுமையாய நீரோட்டமில்லாது மலந்தாங்கி ஒளி மழுங்கி ஈயைப் போன்றும் பறவைகளின் சிறகு போன்றும் நீர்க் குமிழி போன்றுமிருக்கும் வயிரங்களை அணிவதால் பலவகையான ஊறுகள் வாழ்க்கையிற் கிளைக்கும். நாளடைவில் வாழ்நாளும் குறைந்து உடலும் வலியற்று விடும். மற்றும் உயிரியல்புகளும் ஒடுங்கும்; பெருங் கேடுகளும் பல்வகையாய்ப் பெருகிச் சூழும்.

வயிரத்தின்கண் சிறு புள்ளிகள் நிறைந்து இருத்தலாகாது. இத்தகைய வயிரத்தை அணிபவர், தம் தகுதிக்கு ஓர் குறைவு நேர்ந்ததென்பதை நாளடைவில் தாமே யுணர்வார். மற்றும் பிறன்கடை வாயிலிற் சென்று இரந்துழலும் நிலையிலே, கண்கலங்கி நாளும் காலங்கழிப்பர். புள்ளிகள் என்பவை நான்கு வகைப்படுவன. அவை,

[அ] புள்ளிகள் வட்டமாயும் சென்னிறமுடையதாயும் செறிந் திருத்தல்.

[ஆ] சிவந்த நிறமுடைய சுழி வலது பக்கமிருந்து இடது பக்கலில் இழைந்துகிடத்தல்.

[இ] மேலுங் கீழுமாக சுழி சிவந்து தோன்றி இடது பக்க மிருந்து வலது பக்கலில் சுற்றி நிற்றல். இதனைப் பரிவர்த்தம் என்பர் அறிஞர்.

[ஈ] தினையரிசி யளவு போன்று, செந்நிறமாய் உருக்கொண் டிருத்தல்.

வெண்ணிறமாயும் மஞ்சள் நிறமாயும் புள்ளிகள் செறிந்திருந்தால், செல்லாத் தீ வாழ்க்கை நேரிடும். சிவந்த சுழியிருந்தால் இருண்ட அறிவாலாய அச்சம், பகையச்சம், இடியச்சம் ஆகியவை மிகும். பரி வர்த்தம், தீர்தற்கரிதாய் காண்டற்காகாப் பெரு நோயை விளைவிக் கும். செந்நிறமோடு தினையளவினதாய உருக்கொண்டுள்ள வயி ரத்தை அணிவதால், பரி, கரி. ஆவினங்களால் உயிருக்கு இறுதி நேரிடும். மஞ்சள் நிறமாயிருப்பின், குலம் வேரொடு கெடும். வெண்மை நிறமாயின், பிறன்கடைச்செலா அச்செல்வம் மிகினும், பெரியராய், வெற்றுயிர் வாழ்க்கையில் நடைப் பிணமாக உலவி முடிவில் மிடிநிலை எய்துவர்.

வயிரத்தின்கண் குறுக்கு நெடுக்காகப் பல கோடுகள் ஓடியிருத்தல் கூடாது. வலப்பக்கம் வழுவின்றி வளைந்திருக்கும் ரேகை ஊறற்ற பெருவாழ்வினை அளிக்கும் பெற்றியதென்பர் ஆன்றோர். இடப்பக்கம் வளைந்திருக்கும் ரேகை, என்றும் வண்ணான் துறையினருகில் வாழ இருக்கும் முயலொப்ப, அச்சத்தாலாழ்ந்து, பொருளாட்சியின்றி பொருட்பயனை இழப்பர். கோட்டின் இடையிலே துண்டிக்கப்பட்டது போல் பிளவு காணப்பட்டால் அது காம மயக்கத்தைத் தரும். அத் தகையதை அணிவோர் அறத்தாறறியாது காமவெறியினால் நல்வழி யொழித்து அல்வழிச் சேரலான், அறக்கடவுளும், அணிபவன் கெட அவனை விட்டகலும். கோடு, சீர்மையொடு செவ்விதிற் செல்லாது இடைகெட்டுத் தடிப்பேறியதாயிருப்பின், ஆறலைக் கள்வர், நஞ்சுடை யரவம், வில், வாள், வேல், கோல் ஆய பிறவற்றாலாய அச்சம் மிகும். பார்வைக்கு நேராக, ஒருபக்கல் சாய்த்து நோக்குங்காலை இரு வயிரங்களை ஒருங்குசேர்த்துப் பொருத்துவதாலேற்படும் பிளவு போல வயிரத்தின்கண் காணப்படின், அத்தகையது சேத ரேகை யாதலான், அதனை யணிபவருக்கு அவரது பொருளும் நல்வினையும் நாளடைவில் தேயும். பொருட்குரியளாகிய திருமகளும், அன்னாரை நிரயத்தில் வீழ்ந்துபட, தன் பொருள் அல்வழிப்பட்டுத் தேய்தல் கண்டு அவ்விடம் விட்டகன்று செல்வாள்.

நவமணிகளில் சிறப்பு வகைகுறித்து இரண்டாவதாக விளங் கும் மரகதத்தைப்பற்றிச் சிறிது காண்குவம். மரகதத்தைப் பச்சை என்பர் தமிழர். தமிழகத்தில் பழம்பச்சையென்றும் புதுப்பச்சை யென்றும் இருவகை வழக்குளது. சங்க காலத்தில் பழம்பச்சைக்குத் தமிழர் தந்த பெருமை ஒப்புயர்வற்றது. பழம் பச்சை மணியினை

இறைவனது தலைமையியல்போடு ஒற்றிச்சேர்த்து சமய குரவர்கள் ஒப்புமைபெற வைத்தலினால், மரகதத்தின் தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுகள் பல. அவை

1. பச்சைநிற முடையர் பாலர் சாலப்
பழையர் பிழையெல்லாம் நீக்கி யாள்வர் —(அப்பர்)

2. மலைமகடங் கோனவனை மாநீர்முத்தை
மரகதத்தை மாமணியை —(அப்பர்)

3. பச்சை மேனியர் பிச்சை கொள்பவர் —(சம்பந்தர்)

4. சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே
சுடர்ம ரகதம டுத்தாற்போல்

அத்தனு ருமையோடின் புறுகின்ற
ஆலவா யாவது மிதுவே —(சம்பந்தர்)

என்பன. மற்றும், வாமபாகத்தின்கண் உமையுடன் கலந்த உருவினராதல் பற்றி சிவபெருமானது திருவுருவம் மரகதவொளியுடன் விளங்குவதை ஒருவாத புகழுடைய திருவாதவூரில் வந்த புண்ணியனார் 'கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை, வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே' எனப் புகன்றுள்ளார். புகலிவேந்தரும் 'நிறம் பசுமை, செம்மையோ டிசைந்துனது நீர்மை' எனவும் புகழ்வாராயினர். எனவே இறைபால் இறவாத பேரன்புற்றார் நவமணிகளைப்போன்று எப்பொருளைப்பற்றிப் பேசினும், இறையின் நிறத்தினையும், எண் குணத்தில் யாதானுமொன்றையினையும் அப்பொருளுக்கு உவமையாகக்கொள்வதியல்பெனப் பெறப்படும்.

மேனாட்டு ரசாயனக் கலை வல்லுநர், பெரில் (Beryl) எனும் ஒருவகை மண்ணில் உண்டாகும் ஒளியுடைய பளிங்கு குராமியக்களிம்பால் (Chromium) பச்சைநிறமெய்தியக்கால், அஃது பெருவியன் பச்சை மணி (Peruvian Emerald) எனப்படுமென்பர். அப்பரும் இத்தகையப் பளிங்கில் உற்பத்தியாகும் பச்சை மணியினை 'பளிங்கினிழலுட் பதித்த சோதி' எனச் சிவபிரானை உருவகப்படுத்தி மகிழ்ந்து புகழ்வார். வலனின் வயிற்றின் புறத்தைக் கொத்தி விழுங்கிய கருடன் நகைத்தலானுமிழ, அது பன்மலைப் பாறைகளின் வெட்ப தட்ப நிலையினிலும் ஊறிப் பின் கதிர்விட்டுப் பிறக்கும் அருமணியே கீழ்நாட்டுப்பச்சையாகும்(Oriental Emerald). இஃதே தமிழகத்தில் தொன்றுதொட்டு வழங்கிக் கொண்டாடப்படும் பச்சையாகும். இதனைப் பாலுள்ள வெண்ணிறக் கண்ணாடிப் பாத்திரத்தின்கண் இடுவோமானால், பால் முற்றும் பசுங்கோலங்கொண்டு விளங்கும். உயிர்ப்பியல்பு நிறைந்து இயற்கை எழிலுடைய இத்தகைய மரகதத்தை 'பாசார் மேனிப் பசுங்கதிரொளிய' என்

புலனும் மனனும் மாட்சிமையுற மகிழ்ந்திசைப்பர் இளங்கோவடிகள். இதனை 'ஒழுகொளி மரகதம்' என்பர் குமரகுருபரர். மற்றும் மரகத மணியொடு வயிரத்தைக் குயிற்றிய திண்ணைகளை, விழாக் காலங்களில் நனி நாகரிகத் தமிழ் நன்மக்கள் அமைப்பரென்ற குறிப்பினை அடிகளே தஞ் சிலப்பதிகாரச் செவ்வறிவு நூலில்

'மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து
மரகத மணியொடு வயிரங் குயிற்றிப்
பவளத் திரட்காற் பைம்பொன் வேதிகை'

எனக் கூறியுள்ளார். இத்தகையவாறு பழங்காலத்தில் வழங்கி வந்த வழக்குகளைப் பற்றிய நூற்குறிப்புகள் தற்போது பெருகக் காணப்படவில்லை. காரணம் யாதோவெனின், அத்தகைய வழக்குகள் உயிர்க்களையும் அருளுயிர்ப்பும் அற்று வளர்ச்சியுருது குறைந்தும் தேய்ந்தும் அழிந்தும் போயினமையானென்க.

மரகதம் அல்லது பழம்பச்சைக்கு சாதிவகை பலயில. கிளி, மயிற்கழுத்து, இளம் நெற்பயிர், பொன்மை என்றவை போன்ற தன்மைகளுடன் பச்சென மரகதம் விளங்க வேண்டும்.

நெய்த்தல் கிளிமயிற் கழுத்தொத்தல் பைம்பயிரிற்
பசத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல்
பத்தி பாய்தல் பொன்வண் டின்வயி
றொத்துத் தெளிதலோ டெட்டுங் குணமே.

மரகதம் செழுஞ்சுடர் நற்சோதி மிக்க பருவுருவுடையதாயிருக்க வேண்டும். மிக்க வழவழப்போடு பளபளப்புடன் பசுமையாய அறுகு போல் இயற்கை யெழிலுடன் திகழ வேண்டும். மயிற்கழுத்து போலும், பொன்வண்டு பொன்மை போலும், வேலம்பாசி போன்றும், இளங்கிளியின் இறகு போன்றும், மூங்கிலிலையின் வண்ணம் போன்றும், காட்டு வாகைப்பூ, துளசியிதழ், தாமரையிலை ஆகியவை போன்றும் பசுமை நிறமுடையதாயிருந்தால், மரகதம் உயரிய நீரோட்டமுடையதாய்த் திகழும். இத்தகைய மரகதங்களின் செழுமையினை வாழ்க்கை வழி நன்கு பயன் கண்டுகொண்டவர் நற்றமிழரே. அன்னாரே மரகதத்திற்குரிய தெய்வம் புதனென்பதூஉம், அஃது வறிய வாழ்க்கையுடையாரை வேந்தனைப்போலாக்கவும் வல்லதென்பதூஉம் சோதிடப்பனுவற் றுணிபெனக் கூறி உண்மையறிவுறுத்துவாராயினர். நன்மரகதத்தை அணிந்துகொண்டவர் வாழ்க்கையும் செல்வமும் அவருள்ளளவும் குறைவு படாதிருக்கும். அகத்தாண்மையும் புறத்தாண்மையும் கொடுக்கும் அன்னவரது உள்ளம் அருளன்புடைமையால் மிளிரும். சீரும் சிறப்பும் அளித்து உளத்து அல்லலைத் தீர்க்கும். நற்கதி தரும். பெருங்கல்வி நல்கி அறிவுணர்ச்சியையுந் தரும். நோயற்ற வாழ்வினை ஈயும். வாத

நோய்களையும் நச்சுக் கேடுகளையும், கால் வீக்கத்தையும், வாந்தி, வயிற்று மந்தம், பொறுக்கலாற்ருத வயிற்றுக் குடல் வலி, காசம் முதலியவற்றையும் போக்கும்.

மரகதத்தின் குற்றங்கள் எண்வகை. அவை

'கருகுதல் வெள்ளை கன்மணல் கீற்றுப்
பொரிவு தராச மிறுகுதல் மரகதத்
தெண்ணிய குற்றம் இவையென மொழிப'. மற்றும்

'கருகல் வெளிருெடு பொரிவே கல்லே மண்ணே
காற்றிலுந்தராச மொடு குற்றமெட்டா, மரகதம்'

என்பதூஉம் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம். நூலோராற் கூறப்பட்ட எட்டுளதாய மரகதக் குற்றங்களில், ஏகை (கீற்று) மாலை (தார்) இருள் (கருகுதல்) ஆகிய இவை மூன்றும் கவனிக்கப்படக்கூடிய மிக்க குற்றமென்பர் ஆசிரியர் இளங்கோவடிகள். இக்குற்றங்களின்றேல், ஏனையதாகிய, வரட்சி, வெடிப்பு, மலமாசு, மருளொளி, மணல் திரட்சி முதலியவைகளைக் கவனியாது விடலாகுமென்பர் சங்க காலத்துப் பிற்காலத்தவர். எனினும் உலக வியற்கைகளை நன்கு முடிவுகட்டிக் குற்றங்களை ஆய்ந்து, நற்கருத்துக்களை எடுத்துரைக்கும் தமிழியல்புடையார், ஆண்டாண்டுங் காட்டுகளாக விதந்து விளக்கியுமுள்ளார்.

வழவழப்பின்றி கீற்றுடன் கரடுமுரடாயிருக்கும் பச்சைக் கற்களை அணிவதால் புழுமலிநோய் அளப்பிலதாய் புன்குரம்பையில் பெருகும். பருக்கைக் கற்கள் போன்று முறுக்கிக்கொண்டும், மாலையாகவும் சொரி சிரங்குபோன்று காட்சியினையுமுடையதாயிருந்தால் அதனையணிபவர் தீயமுயற்சிகளிற் றலையிடுவர். தீய முயற்சிகளுக் கருவியாய கொடுங் கருவிகளால் அகாலத்தில் இழிநிலையுமெய்துவர். எழுபிறப்பும் தீயவை தீண்டுமாதலான், மக்கள் தொடர்புற்ற புறப்பொருள், துன்பம் தருமென்பதும் அறியப்படுதலாயிற்று. மைபோன்று கருக்கொண்ட பாட்டம் போன்றும் நீர்மையுடையதாய மரகதக் கற்களையணிவதால், கவலைப்பெருக்குடன் மனம் வாதைப் படும். இயல்பாயிருக்கவேண்டிய ஒளி இராது. மரகதம் மாறு நிறத்தினைக்கொண்டிருத்தலை மலினக் குற்றமென்பர் அறிஞர். அணிபவர் காது இதனல் நாளடைவில் செவிடுபடும்.

இருளெனப்படும் கருகுதல் என்ற குற்றத்தையுடைய மரகதத்தை அணிதல் தகாது. அணிபவர் துன்பமுந் துயரும் ஒருங்கடைவர். கருகல் குணமுடைய மரகதத்தை அணிந்தால், அணிந்து கொண்டவரது மனம், அக்கணமே நீராய் வெந்து, அறமே கூற்றமாகத் தோன்றுமாறு அகாலத்தில் இறுதி யெய்துவர். கருகல் குணமுடைய மணியின் குற்றத்தைக் குறிக்கொண்டே, காழிப்

பிள்ளையாரும் தங் காலத்துச் சமணரைப் பழிக்கு முகத்தால் 'கருகு முடலார்' என்பர்.

கரிய மரகதமணி, தம் வலிய இயல்பால், தன்னை அணிபவரது ஆயுளின் எல்லையியல்பு முற்றுப்பெருமுன்னரே, அதனை இடையறுப்பின், அதனுலுறும் பிறவித் துன்பம் கொடியதாகி அதிகப்படுகின்றது. சிந்திக்குங்காலை, யாக்கை யெடுத்தலை யாக்கையானே போக்கிக்கொள்ளல்வேண்டுமென்பது நியதி. பிறவி வாயிலாக முத்திப்பேறுபெறவிருப்பதால், பிறவியில் தேயக்கிடக்கும் பாசப் பற்றினை நாமியற்றும் நல்வினையாலே அகற்றல்வேண்டும். நீக்கற்குரிய பாசப் பற்று பிறவியின் ஆயுட்கால எல்லைக்கும் அவ்வெல்லையி லியற்றப்படும் வினைக்கும் ஏற்ற அளவாகின்றது. சற்று ஆயின், பிராரத்த வினையினளவே வாழ்க்கையின் அளவு. எனவே ஆயுட்கால எல்லை முற்றுப்பெருமுன்னர், அதனை இடையறுப்பின், பாசப் பற்றின் நீக்கத்தின் அளவும் குறைவுபடும். இக்குறைவு தீர, பிறிதொரு பிறவி மிகையாக எடுக்க நேரிடும். எனவே பாசமும் நாசமாகாதும் பிறவியின் நோக்கமும் நிறைவேருதும் எண்ணிக்கையும் மிகுதலாகின்றது. இவ்வண்ணம் பிறவி மிகுமானுல் பிறவித் துன்பம் பன்மடங்காகப் பெருகுகின்றது. எனவே பிறவிப் பெருங் கடலின் வினையலைகளான் மொத்துண்டு சுழன்றலையாநிற்க, மறுவறு சிறப்பின் மாசிலா மரகதமணியாய இறைவனடியைப் புணையாகப் பற்றல் வேண்டுவது இன்றியமையாததென்க. இதுகுறித்தே, நலங்கெழு மணிகளின் நயம் தெரிந்த தமிழ்ப்பெருமக்கள் பிறவித் துன்ப நீக்கத்திற்குக் குற்றமற்ற மரகதமணியை அணிதலைப் பெரு வழக்காகக் கொண்டுள்ளார். இஃது அவர் ஊகத்துக்குகந்ததேயாம். இவ்வாறிருக்க, தோன்றுதல் பொன்றுதலின்றி என்றுமிருக்கும் பச்சை மேனியராய இறைவரை, கருக்கு மணி மிடறுடையாரென அப்பர், சம்பந்தர் முதலியோர் வஞ்சகப் புகழ்ச்சியாய்ச் சுட்டியது, இயல்பாகவே மலபந்தத்தினின்று நீங்கிய தூய இறைவர்தம் அருளுருவத்தையும், பகைமையிலா யின்பமுடையனுதலையும், பேராற்றலையும், நன்றருளித் தீதகற்றும் தன்மையினையும் வியந்து குறிப்பித்ததென்பது உளங்கொளற்பாற்று. கறையிலங்குமிடறுடையாரை இறைமைக் குணம் பழுதுபடுமாறில்லாத பெருந்தடையெனப் போற்றி, ஆளுடைய அரசு, நன்மணியின்பாலுள்ள குற்றங்களோடு தன்னை உருவகப்படுத்திக்கொண்டு 'குலம் பொல்லேன், குணம் பொல்லேன், குறியும் பொல்லேன், குற்றமே பெரிதுடையேன்' என மொழியும் நேர்மையினின்று அவர்தம் முள்ளுணர்வில்லெழூஉம் நடையெழிலில் பழுத்தொழுகும் பொருட்சுவையில் படிந்த அவரது இயலழகை உள்ளவாறு காண்க.

(தொடரும்)

*கங்காதேவி எழுதிய மதுரா விஜயம்.

[நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.]

ஏறக்குறைய ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கி, இந்தியாவில் பண்டுதொட்டு தொடர்ந்து வளர்ந்துவந்த பண்பாடுகளையும், கலைகளையும், சமயங்களையும் விழுங்கிவிடுவதென எழுந்துப் பெருகிய இஸ்லாமியப் பெருவெள்ளம், தென்னாட்டில் புகுந்து அழிவு செய்யாது காத்த பேரணையாக வரலாற்றில் விளங்குவது விஜயநகரப் பேரரசாகும். இந்தப் பேரரசின் தோற்றமும், தோற்றக் காலத்திய பெரியோர்களின் கொள்கைகளும் தனிச் சிறப்புடையன. தன்னலத்தையும் தனிப் பெருமையையும் தான் என்னும் தன்மையையும் அறவே மறந்து, நாட்டையும் நாட்டின் பண்பாடுகளையும் காப்பாற்றுவதே கடமையெனக்கொண்ட பல பெரியோர்களின் ஒற்றுமையான பெருமுழைப்பினாலேயே இந்தப் பேரரசு உயர்வடைந்தது. இந்தப் பேரரசில், அரசர்களும், அமைச்சர்களும், படைத் தலைவர்களும், பெரும்புலவர்களாகவும், கலைஞர்களாகவும், தத்துவ ஞானிகளாகவுமிருந்ததோடு, பெண் மக்களும் பெரும் புலவர்களாகத் திகழ்ந்தமை பெரிதும் பாராட்டத்தக்கதாகும். அரச குடும்பத்தைச் சேர்ந்த பல பெண்மணிகள் கவிஞர்களாக விளங்கியுள்ளார்கள். அவ்வாறு விளங்கியவர்களில், கங்காதேவி என்பவர் முதலாவதாக வைத்து எண்ணக்கூடியவராவார். இவர், விஜயநகரப் பேரரசைத் தோற்றுவித்த முதல் அரசர்களுள் இரண்டாவதான பொக்கணவுடையாரின் மகன், குமார கம்பண்ணவுடையாரின் மனைவியான அரசிளங்குமரியாகும். இவர் எழுதிய வடமொழிக் காப்பியமான 'மதுரா விஜயம் அல்லது கம்பண்ணராய சரித்திரம்'. என்பது, இவருடைய கணவனான குமார கம்பண்ணவுடையாரின் வாழ்க்கையைக் கூறும் வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கும் சுவைமிகுந்த இலக்கியமாகும். இந்த நூலின் ஏட்டுச் சுவடி, திருவனந்தபுரம் நூல் நிலையத்தில், சிறிது பழுதுபட்ட நிலையில், ஒன்று கிடைத்தது; அதில் 521 ஸ்லோகங்களே கிடைத்தன; அவற்றுள்ளும் 58 ஸ்லோகங்கள் அரைகுறையாக இருந்தன; எழுபதுக்கு மேற்பட்ட ஸ்லோகங்கள் காணப்பெறவில்லை. வேறு எங்கும் இந்நூலின் சுவடிகள் கிடைக்கப் பெறுமையால், கிடைத்த நிலையில் அச்சிட்டு வெளியிடுவது நலமெனக் கருதி, கிரந்த எழுத்துக்களில் எழுதியிருந்த

*மதுராவிஜயம் — வடமொழி நூல் — கங்காதேவி இயற்றியது. ஆங்கில மொழி பெயர்ப்பு. பதிப்பாசிரியர் திரு. S. திருவேங்கடாச்சாரி — அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடு.

அந்தச் சுவடியைப் பழுதற ஆராய்ந்து, 1916-ஆம் ஆண்டு, திருவனந்தபுரம் பண்டிதர்கள், ஜி. ஹரிஹர சாஸ்திரியாரும், வி. சீனிவாச சாஸ்த்திரியாரும், பதிப்பித்து வெளியிட்டார்கள். இந்நூலில் காணப்பெறும் வரலாற்றுச் செய்திகளை விளக்கி, தி. அ. கோபினுதராயர் ஒரு முகவுரையும் எழுதியிருந்தார். நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர், இந்த நூல், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தாரால், சீரிய முறையில் பதிப்பிக்கப்பெற்று, வடமொழி மூலம், ஆங்கில மொழி பெயர்ப்பு, வரலாற்றுப் பகுதி, காப்பியத்தின் நலம், ஆசிரியையின் கல்விச் சிறப்பு முதலியவைகளை விளக்கும் ஆங்கில முகவுரை முதலியவற்றுடன் வெளிவந்துள்ளது. இதன் பதிப்பாசிரியரும் மொழிபெயர்ப்பாசிரியருமான அழகப்பா பயிற்சிக் கல்லூரியின் பேராசிரியர், எஸ். திருவேங்கடாச்சாரியாருடைய முயற்சியும் திறனும் பாராட்டற்குரியது. புத்தகத்தின், தாள், கட்டு, அச்சு முதலியவை யெல்லாம் முதல் தரமானவை. எல்லா வழியாலும் இவ்வெளியீடு பல்கலைக்கழகத்தின் தகுதிக்குத் தக்கதாகவே விளங்குகின்றது.

'மதுராவிஜயம்' என்னும் இந்நூல், அளவால் சிறியதாக விருப்பினும், இலக்கிய நயத்தாலும், வரலாற்றுச் செய்திகளாலும், பல வரலாற்றுச் செய்திகளைத் தெரிந்துகொள்ளுவதற்கும் சிந்திப்பதற்கும் தூண்டும் முறையாலும் பெருநூல் என்றே கொள்ளவேண்டும். இந்த நூலிலுள்ள வடமொழி ஸ்லோகங்களின் நடை, இனிமையாகவும், பழம்பெருநூல்களின் நடையை நினைவூட்டுவதாகவும் இருக்கிறது. பாயிரத்துள், தொல்லாசிரியர்களை வணங்கும் முறையும், ஒவ்வொரு ஆசிரியரின் பெருமையையும் சுருங்கச் சொல்லும் பொருளாளமும், இந்த ஆசிரியையின் பண்பாட்டையும் நுனித்த ஆராய்ச்சியையும் நன்கு தெரிவிக்கின்றன. வான்மீகியை, நெறியுடையார் உள்ளத்தை மகிழ்விக்கும் முதற்கவி என்றும், வியாசருடைய சொற்றொடர்கள் செங்கரும்பின் கரணைகள் ஒப்பனவென்றும், காளிதாசனுக்கு அடிமையாகவிருக்க விரும்பாத கவிகள்தான் யாவர் என்றும், பவபூதியின் பனுவல்கள் காமதேனுவின் இனத்தன என்றும் கூறுவது கருதற்பாலது. மேலும், தன் காலத்துப் புலவர்களையும் குறிப்பிடுகின்றார்; அதில் எழுபத்து நான்கு காவியங்கள் இயற்றிய அகஸ்த்தியர் என்னும் ஒரு புலவருடைய கல்விப்பெருக்கைச் சிறப்பித்துப் பாராட்டுகின்றார். திருத்தொண்டர் புராணத்தை வடமொழியிலாக்கியவரும், அகத்தியர் தேவாரத்திரட்டு என்ற தொகுப்பைத் திரட்டியவரும் இவராகவிருக்கலாமோ என்பது ஆராயற்பாலது. இவ்வாசிரியை, பொதுவாகக் கூறும் சில

இலக்கியப் பண்புகள், இலக்கிய ஆராய்ச்சிக்கு அடிப்படையான குறிப்புகளாக இருக்கின்றன.

"நற்குணமுடையாளேனும் அழகில்லாதவள் தன் கணவன் உள்ளத்திற்கு மகிழ்ச்சியளிக்காததுபோல குற்றமில்லாத கவியாயினும் இனிய பண்புகள் இல்லாவிடில் கற்றோரை மகிழ்வியாது".

"கானகத்திலுள்ள மாங்கனியை விரும்பாது வேம்பையே விரும்பும் காகம்போல, கயவர்கள், செய்யுளிலுள்ள குணங்களை மதியாது குற்றங்களையே தேடுகின்றார்கள்".

"அளவை நூல் வல்லார் பலர்; இலக்கணப் புலவர் ஆயிரக் கணக்கினர்; இனிய கவிகளால் இன்பம் அளிக்கும் கவிகளோ?—எங்கோ ஒருவர்" என்பன அக்குறிப்புகளுள் சிலவாம்.

இவ் ஆசிரியை பலவகை அணிகளுடன் இந்நூலைச் செய்துள்ளார்; எடுத்துக்காட்டாக ஒரு உவமையைப் பார்ப்போம்: குமார கம்பண்ணனின் காளைப்பருவத் திருமுகத்தில் அணர் அரும்பிய பொலிவை "திங்களின் நடுவில் அமைந்த கறையை அவ்விடத்தினின்றும் விலக்கி விளிம்பில் ஒரு கோடாகச் செய்யக்கூடுமானால் அவ்வாறு நடுக் கறை நீங்கி விளிம்பளவே கறுமை தோன்றும் திங்கள், அவன் திருமுகச் செவ்விக்கு ஒப்பாகும்" என உவமிக்கின்றார். இது சிவப்பிரகாசர், அல்லமனின் திருமுகப் பொலிவை விளக்கும்

"விளிம்புற நடுக்களங்கம் வீழ்ந்துசூழ்
மதியொன் றுண்டேல்
வளங்கெழு மயிரொழுங்கு வள்ளல் வாண்முகம்
நிகர்க்கும்"

எனக்கூறும் பாடற் பகுதியோடு ஒப்ப நோக்கி மகிழக்கூடியதாகும். இவ்வாறே, அணல் விளங்கும் திருமுகச் செவ்வியை வியந்து இக்காலப் புலவரொருவர் பாடிய "மயிர்த்த முழுமதி" என்னும் சொற்றொடரும் இடையே நினைவுக்கு வருகிறது.

இந்தச் சிற்றிலக்கியம் எட்டு சருக்கங்களாகப் பிரிக்கப் பெற்றிருக்கிறது. முதலாவது சருக்கம், கடவுள் வணக்கம் அடியார் வணக்கம், விஜய நகரத்தின் சிறப்பு, அப்பேரரசின் தலைவனாகிய பொக்கணனின் பெருமை முதலியவற்றையும்; இரண்டாவது சருக்கம், பொக்கணனுடைய மக்களாகிய கம்பண்ணன், சங்கமன், இளைய கம்பண்ணன் முதலியவர்களைப்பற்றியும்; மூன்றாவது சருக்கம், பொக்கணன், கம்பண்ணனுக்கு அசரர் கடமைகளைப் பற்றியும், தொண்டைநாட்டரசனாகிய சம்புவராயனையும் சில காடவர்களையும் வெற்றிகொண்டு மதுரைக்குச்சென்று அங்கு நிலைத்திருந்த துருக்க அரசை அழிக்கவேண்டுமென்பதைப்

பற்றியும், கூறுவதை கம்பண்ணன் உறுதியுடன் மேற்கொண்ட செய்தியையும்; நான்காவது சருக்கத்தில், கம்பண்ணனது தென்னாட்டுப் படையெடுப்பும், சம்புவராய மன்னனைப் பலவாறு வெருட்டி அவன் முடிவாக அரண்புகுந்த படைவீட்டுக் கோட்டையையும் முற்றுகையிட்டு அம்மன்னனோடு தனித்து வாட்போர் செய்து வெற்றிகொண்டு, காஞ்சிக்குச் சென்று, தன் படைகளை அங்கு நிலைநிறுத்தியதையும்; ஐந்தாவது சருக்கத்தில், கார் காலத்தையும், கூதிர்காலத்தையும், விரிஞ்சிபுரத்தில் தங்கியிருந்ததையும்; ஆறுவது சருக்கத்தில்; கம்பண்ணன் அங்கு எவ்வாறு பொழுதுபோக்கினான் என்பதையும்; ஏழாவது சருக்கத்தில் கம்பண்ணனும் கங்காதேவியும் உரையாடிக்கொண்டிருந்த செய்திகளையும் (இங்கு இடையில் ஏடு கிடைக்கவில்லை); எட்டாவது சருக்கத்தில், இறைவி, கம்பண்ணன் முன்தோன்றி தென்னாட்டுக்குத் துருக்கர்களால் நேர்ந்த அழிவை எடுத்துக்கூறி, அந்தத் துருக்கர்கள் மதுரையைத் தலைநகராகக்கொண்டு செலுத்தும் ஆட்சியை அடியோடு அழித்து நாட்டின் சமயத்தையும், கலையையும், கோயில்களையும் மறுமுறை நிலைநாட்டவேண்டிய பொறுப்பையும் ஒரு தெய்வீக வீரவாளையும் அவனிடம் ஒப்புவித்து ஆசிகூறி அருள் செய்தாள் என்பதையும்; ஒன்பதாவது சருக்கத்தில், துருக்கர்களோடு செய்த போரின் திறத்தையும், மதுரைச் சுலுத்தானும் கம்பண்ணனும் தனித்துச் செய்த வாட்போரையும் முடிவில் சுலுத்தான் கம்பண்ணனது வீரவாளுக்கு இரையானதையும் பின்னர் கம்பண்ணன் எஞ்சிய பகைப்புலத்தார்க்கு 'அஞ்சற்க' என அருளி அனைவரும் போற்ற முடிசூட்டியதையும் பேசுகின்றது. இந்நூலில் கூறப்பெறும் பல செய்திகளும் வரலாற்று உண்மையுடையனவாகவும் வேறு வரலாறுகளாலும் ஒத்துப் பேசப்பெறுவனவாகவும் இருக்கின்றன. இந்த நூலைப் படிப்பவர்கள் நூல் எழுந்த காலத்திய தென்னாட்டு நிலையைப் பற்றியும், சம்புவராய மன்னர்கள், மதுரைச் சுலுத்தான்கள், இந்நூலில் வரும் பெரியோர் முதலியவர்களைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது.

முதலாவதாக, பாயிரப் பகுதியில், தெய்வங்களுக்கு வணக்கம் செலுத்தியதற்கு அடுத்தபடியாகவும், வான்மீகி, வியாசர் முதலிய முனிவர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்கு முன்பாகவும், வணங்கப்பெறும் குரு கிரியாசத்தி என்னும் பெரியார் யாவர் என்பதைத் தெரிந்துகொள்ள முயல்வோம். வணக்கத்தின் வைப்பு முறையாலும், 'ஞானமும் நன்மையும் விளங்கும் முக்கண்ணனே' எனப்போற்றுவதாலும் இவர் அரசகுலக் குரவராக இருக்கவேண்டுமென நாம் எண்ணவேண்டி

யிருக்கிறது. விஜயநகரப் பேரரசின் இளம்பருவத்தில் எழுந்த இந்த வரலாற்றுக் காப்பியத்தில் ஒரு இளவரசியினுலேயே இவ்வாறு போற்றப்பெறுவதால், இப்பேரரசைத் தோற்றுவித்த பெரியாராக இவர் இருக்கக்கூடுமோ என எண்ணுவதும் இழுக்காகாது. இடைக் காலத்தில், சமயங்களை வளர்ப்பதற்கான பல நிலையங்கள் நம் நாட்டில் இருந்திருக்கின்றன; இவை 'மடம்' என்ற பெயரால் அழைக்கப்பெற்றன; இந்த மடங்களில் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களாகிய கடவுட்டன்மை வாய்ந்த பல துறவிகள் வாழ்ந்து நாட்டிற்கு நல்வழி காட்டி வாழ வைத்திருக்கின்ருர்கள். சைவ சமயத்தைச் சார்ந்த பல மடங்கள், வீட்டு நெறியினையும் உலக நெறியினையும் வளர்ப்பனவாக 'ஞான சத்தி' மடம் 'கிரியாசத்தி' மடம் என்ற பெயர்களைக்கொண்டு சிறந்த துறவற வேந்தர்களின் தலைமையில் தங்கள் கடமைகளைச் செய்துவந்தன; அவற்றுள், கிரியாசத்தி மடங்கள் மக்களுக்கு வீர வுணர்ச்சியை ஊட்டும் கொள்கையை மேற்கொண்டு, சைவ சமயத்தின் பிரிவுகளாகிய 'பாசு பதம்', 'காளாமுகம்' 'காபாலிகம்' முதலியவற்றைச் சிறப்பித்தன. இவ்வாறு வீரவுணர்ச்சிக்கு முதன்மை கொடுப்பதற்குப் பொருட்டாக இருந்தது, வட நாட்டில் கி. பி. 1000த்திலிருந்தே தொடங்கிய மகமதியரின் படையெடுப்பும் அதனுல் சமயத்துக்கும் நாட்டுக்கும் நேர்ந்த அழிவுமேயாகும். தென்னுட்டில் மகமதியரைப் புகவிடக்கூடாது என்ற உறுதியுடன் தன் வாழ்நாள் முழுதும் போர் செய்து மறைந்த போசலப் பேரரசனுகிய மூன்ரும் வீரவள்ளாளனுல் இம் மடங்கள் பெரிதும் போற்றி வளர்க்கப்பெற்று வந்தன. வீரவள்ளாளன், பேரரசனுகவும் படைத் தலைவனுகவும் நின்று போர் செய்து, பல இன்னல்களுக்கு உள்ளாகி, மகமதியர் வரவைத் தடுத்த காலத்தில், அவனுக்கு எல்லா வகையாலும் ஊக்கம் அளித்துத் துணைசெய்து ஞான விளக்காய் நின்றவர் 'காசிவிலாச கிரியாசத்தி' என்னும் தெய்வத் திருவினர் என நாம் எண்ணக்கூடியதாக இருக்கிறது; இவரை 'குல குரு' என்றும், 'இராயராஜகுருமண்டலாச்சாரியர்' என்றும், 'இராய ராஜ்யகுரு பிதாமகன்' என்றும், கல்வெட்டுகளும் செப்பேடுகளும் புகழ்கின்றன. இவருடைய மடம் 'கந்த பரம்பரையை'ச் சேர்ந்தது; காளாமுகச் சைவத்தை வற்புறுத்துவது; சைவ சித்தாந்தத்தைத் தத்துவமாகக் கொண்டது. கந்த பரம்பரையைச் சேர்ந்த சைவத் திருமடங்கள் பல நம் நாட்டில் ஒரு காலத்தில் செழிப்புற்றிருந்திருக்கின்றன; தஞ்சை மாவட்டத்திலுள்ள சூரியனுர்கோயில்திருமடமும் இந்த மரபைச் சார்ந்ததேயாகும்.

துருக்கரைத் தென்னாட்டில் புகவொட்டாமல் தடுப்பதே தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்ட வீர வள்ளாளன், கி. பி 1328ல் தன் தலைநகரைத் திருவண்ணாமலைக்கு மாற்றி அங்கிருந்து தன் வேலைகளைச் செய்யத் தொடங்கினான். தென்னாட்டு மக்களை எல்லாம் ஒன்றுபடுத்துவதற்கும், தன் முயற்சிகள் வடக்கேயுள்ள மகமதியப் பேரரசுக்குத் தெரியாமலிருப்பதற்கும், இதுவே தக்க நடு இடம் என எண்ணினான். ஆனால், தென்னாட்டின் வடவெல்லையாகிய துங்கபத்திரை ஆற்றின் கரைகளில், தக்க உறுதியான அரண்களும், படைகளும் இருந்தால்தான் தன் எண்ணம் கைகூடும் என்பதையும் உணர்ந்தான்; அவ்வாறு தான் அமைக்கும் அரண்கள் துருக்கரது நோக்கத்தை இழுக்கக் கூடாது என்பது அவனுக்கு நன்கு தெரியும்; எனவே, துங்கபத்திரைக் கரையில் நடக்கவேண்டிய வேலைகள், எவரும் ஐயுறக் கூடாத ஒரு துறவியின் பார்வையில் நடைபெறவேண்டியதாயிற்று. அப்பொறுப்பை ஏற்று, தன் பேரறிவாலும், தெய்வத் துணையாலும், வரவிருக்கும் விஜயநகரப்பேரரசின் அரண்களையும், நகரையும், படைகளையும் அமைத்தவர் காசிவிலாச கிரியாசத்தியே என நாம் எண்ணக்கூடியதாகவும் இருக்கிறது. வீர வள்ளாளன் பலவாறு முயன்றும், ஏற்ற படைவலியிருந்தும், துருக்கர்களை வெற்றிகாண முடியாது, இறுதியாக, கி. பி. 1342 ஆம் ஆண்டில், திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள கண்ணனூர்—கொப்பம் என்ற இடத்தில் துருக்கரோடு செய்த போரில் வீழ்ச்சியடைந்தான்; அவனோடு போசலப் பேரரசும் வீழ்ந்தது. போரில் கொல்லப்பெற்றான் என்பது வரலாறுகளில் காணப் பெறும் செய்தி; ஆனால், இவன் போரில் கொல்லப்பட்டானா அல்லது கொல்லப்பெற்றான் என்ற சொல் உலகில் பரவும்படி செய்து மறைந்துவிட்டானா என்பது பல துணைகளையும் கொண்டு முடிவு செய்யவேண்டியதாகும். இந்த நிலையில் நமக்கு ஒரு ஐயம் தோன்றுகிறது; தன் பேரரசைத் தன் வழியினரே ஆளவேண்டும் என்ற எண்ணத்தினும் தென்னாடு துருக்கர் கைப்பட்டு அழியக்கூடாது என்ற பெருநோக்கத்தால் ஊக்கப்பெற்றுத் தன்னை அரசன் என்ற நிலையிலிருந்தும் மாய்த்துக்கொண்டும் துறவறத்தை மேற்கொண்டும் தன் கொள்கையையும் குறிக்கோளையும் கைவிடாமலும் வீரவுணர்ச்சி தளராமலும் தான் முன் ஆதரவு செய்து போற்றிய கிரியசத்தித் திருமடத்தில் 'திரியம்பக கிரியாசத்தி' என்ற மாற்றுப் பெயருடன் தங்கித் தன்னுடைய உற்ற படைத் தலைவர்களையும் உறுதியான அமைச்சர்களையும் துணைவர்களையும் ஒன்று சேர்த்து, விஜயநகரத்தைத் தலைநகராகக்கொண்டு, ஒரு புதிய பேரரசாக அமைத்து துருக்கர்கள்

தென்னாடு புகாத தன் குறிக்கோளை நிலைநாட்டியிருக்கமுடியாதா? என்பதே. அரசர்கள், தங்கள் குறிக்கோளை அடைவதற்காகத் தங்கள் நிலையை மறைத்துத் துறவிகளாக மாறி தாங்கள் செய்ய வேண்டியவற்றைச்செய்வதும், ஏற்ற காலத்தை எதிர்பார்த்திருப்பதுமுதலியனவும் புதிய முறையன்று. மதுரையை ஆண்ட நாயக்க அரசர்களைச் சேர்ந்தவர் ஒருவர், துறவுபூண்டு திருவாவடுதுறைத் திரு மடத்தில் ஒரு அடியாராக இருந்ததும், ஏற்ற காலம் வந்தவுடன்அரசச் செல்வத்தைப்பெற்று, தான் அண்டியிருந்த திருமடத்துக்குக் காணிக்கையாக அளித்ததும் நம்மவர் பலரும் அறிந்ததே. திருவண்ணமலையை இடமாகக் கொண்டு வழங்கும் சில பழஞ் செய்திகளும், பதினேழாம் நூற்றாண்டுக்குமுற்பட்டதாய ஒரு தல வரலாறு குமார கம்பண்ணனை "மைசூர் ராசாவாசலதளகறதம் கம்பண உடையவர்" என்று குறிப்பிடுவதும், சங்கமன் என்ற சொல்லுக்குரிய பல பொருள்களும், போசலப் பேரரசனின் காரியக்காரர்கள் பலர், விஜயநகரப் பேரரசின் தொடக்கத்தில் பணியாற்றி வந்தமையும் கருதத்தக்கன. நமக்குத் தோன்றும் ஐயம் எவ்வாறு முடிவுபெறினும், இது, இதுவரையில் கொண்டிருந்த கருத்துக்களால் ஒரு சார் கோடாமல் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதேயாகும். இந்தப் போசளர்களும், பழந்தமிழ்க் குடிகளாகிய வேளிர் என்னும் குறுநில மன்னர்களிலிருந்து கிளைத்தவர்களே. இவர்களைப்பற்றிய பழஞ்செய்திகளுக்கும் இருங்கோவேளைப் பற்றிய பழஞ்செய்திகளுக்கும் உள்ள ஒற்றுமையும் இங்கு கருதத்தக்கது. சங்ககாலப் புலவராகிய கபிலர், இருங்கோவேளை, 'புலிகடிமால்' என அழைப்பதும், போசலர், தங்கள் மரபின் முதல்வன் ஒரு முனிவனது ஆணையால், ஒரு புலியைக் கொன்றமையால் 'ஹொய்சளர்' என்னும் மரபுப் பெயரைத் தாங்கினர்கள் என்றுகொள்ளும் பழங்கதையும், கபிலருக்குமுற்பட்ட புலவராகிய கழாத்தலையாரை, இருங்கோவேளின் முன்னேருள் ஒருவன் இகழ்ந்தமையால் இம்மரபினரது, சிற்றரையம் பேரரையம் என இருகூறுக அமைந்த வளமிக்க ஊர் அழிந்தமையும், புலிகடிமால் மரபினராகிய போசலர் பழந்தமிழ்க் குடிகளைச் சேர்ந்தவர்கள் என்பதை உணரலாம். வீரவல்லாளனது போர்முறையும் பழந்தமிழ்ப் போர்முறைகளில் கூறப்பெறும் வஞ்சித் திணையை ஒட்டியே காணப்பெறுகிறது. வஞ்சித்திணை என்பது, ஆற்றங்கரையில் ஒருகரையில் முளைத்த பிரம்புக்கொடி, தான் தோன்றிய கரையில் நன்றாக வேர் ஊன்றித் தன் நிலையை வலிமைப்படுத்திக்கொண்டு எதிர்த்த கரைக்குத் தாவுவது, ஆற்றில் பெருவெள்ளங்கள் வரும்போது, தன் கரையிலுள்ள வேர்ப்பிடிப்பை விடாமல் வெள்ளத்தோடு வெள்ள

மாய்ச் சாய்ந்து கொடுத்து, வெள்ளம் சிறிது தாழ்ந்தவுடன் தலை எடுத்து நின்று எதிர்கரையைத் தாவுவது முதலான சில முறைகளாகும். இம்முறைகளுக்கு ஒரு பெயர் கொடுத்து இலக்கணத்துட் கூறப்பட்டுள்ளதைக் கொண்டு, தமிழ்ப்போர் முறை எனக்கூறியதே யல்லாமல் இது தமிழருக்கே தனி உரிமையானதென்பது எம் கருத்தன்று.

இனி, 'சம்புவராயர்' என்பவர் யாவர் என்பதையும் கம்பண்ணன் காலத்திலும் சற்று முன்பும் அவர்கள் இருந்த நிலை எத்தகையது என்பதையும் ஒருவாறு பார்ப்போம். சம்புவராயரும், மேலேகண்ட போசளர்கள் போன்று தமிழ் பழங்குடிகளாகிய வேளிர்களைச் சேர்ந்தவர்களே; அவ்வேளிர்களுள்ளும் இருங்கோவேள் குடியின் கிளையினரேயாவர். போசலர் 'புலிகடிமால்' என்ற சிறப்பைத் தங்கள் மரபுப்பெயர்களாகக் கொண்டார்கள். இவர்கள், அந்தக்குடிக்குள்ள மற்றொரு சிறப்பாக, கபிலர் கூறும் 'வடபால் முனிவன் தடவினுள் தோன்றியதைத் தங்கள் குடிப்பெயராகப் புனைந்துகொண்டார்கள். அந்த முனிவனது பெயர் சம்பு முனிவன் எனக்கொண்டு அவனது வேள்விக் குண்டத்தில் தோன்றியமையால் 'சம்பு' குலத்தார் எனவும் சம்புவராயர் எனவும் பேசப்பெற்றனர். பழந்தமிழ்க் குடிகளாகிய இவர்கள் பிற்காலத்தில் பலவேறு இடங்களில் பலவாறு பரந்து நின்றுரேனும், சில பழ நினைவுகள் அவர்களிடம் தங்கியிருந்தமையால் அவர்களுடைய முற்கால நிலைமை நாம் ஆராய்ந்து தெரிந்துகொள்ளக்கூடியதேயாகும். பன்னிரண்டு, பதின்மூன்றுவது நூற்றுண்டுகளில், மைசூரின் வடகிழக்குப் பகுதிகளில் குறுநில மன்னர்களாக ஆட்சிசெய்துவந்த ஒரு மரபினர், தங்களை உறையூர்ச் சோழர்கள் என்று சொல்லிக்கொள்வதும், அவர்களுள் 'இருங்கோளராசர்' என்ற பெயர் அடுத்தடுத்து வருவதும், அம்மரபினருக்கும் போசலருக்கும் நெடும் பகை இருந்து வந்ததும்; சோழர்களின் படைத் தலைவர்களில் 'இருங்கோளன்' 'துவராபதிவேளான்' என்ற பெயர்கள் பல இடங்களில் காணப்படுவதும், இவ்வேளிர்குடியினர் பல இடங்களிலும் பரந்து, தொடர்ச்சியாக, வாழ்வுக்கும் தாழ்வுக்கும் உள்ளாகி நிலைத்திருந்தனர் என்பது தெளியலாம். இந்தச் சம்புவராயர்களுக்கு 'செங்கேணி' என்ற ஒரு அடை வருவது, இவர்களுக்கும், கேணியிலுள்ள மலர்களை வேலாகப் பெற்ற முருகன் அடியானுகிய ஓய்மானுட்டு நல்லியக்கோடனுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கலாகுமோ என்ற ஒரு ஐயத்தையும் தோற்றுவிக்கின்றது.

(தொடரும்)

கண்கள்.

" தமிழன்பன். "

கண்கள் தாம் மனிதனுடைய உறுப்புகளிலே மிகச் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன. வேறெவ்வுறுப்புக்கும் இல்லாத பெருமை யருமைகள் நமக்குக் காட்சி நல்கும் கண்களையே சென்றடைகின்றன. அன்பை அள்ளிச் சொரியும் அன்னையும் தன் சேயைக் 'கண்ணே! கண்மணியே!' என்றே அழைத்துவப்பாள். 'மூக்கே! காதே! காலே! கையே!' என எத் தாயும் அழைக்கமாட்டாள். கண்களால்தான் வழிகாண முடிகின்றது. வழிகண்ட பிறகே மேடோ, பள்ளமோ இன்னவென்று உணர்ந்து ஏற்ப இயங்க முடிகின்றது. கண்கள் இல்லையாயின், உலகே இருண்டு விடுகின்றது. வாழ்வு இடர்ப்பட்டுத் தடைப்படுகின்றது. ஏக்கமும், தேக்கமும் வாழ்வில் தோன்றிவிடுகின்றன.

கண் பார்வை பெரும்பாலும் மனத்தைத் தழுவியே காட்சி நல்கும் என உரைப்பர் சான்றோர். 'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்றார் தெள்ளிய அறிவுத் திருவள்ளுவனார். முகமென ஈண்டுக் குறித்தாராயினும் கண்களே முகத்தின் தலைமை நிலையம் எனல் சாலப் பொருந்தும். கண்ணுக்கும் உள்ளத்திற்கும் உள்ள துன்னிய தொடர்பை வள்ளுவர் பல இடங்களிலே படம் பிடித்துக் காட்டுகின்றார்.

அன்புடைமையைச் சாற்றச் சொற்கள் வேண்டா, கண்களே போதும். ஒருவரின் அன்பை அடக்கி வைக்க என்ன முயற்சிகள் புரியினும் அவை வீணே. அன்பிற்கும் அடைக்குந் தாழ் உண்டோ? தன் அன்பிற்குரியார் அல்லற்படுவதைக் கண்டவுடன், கண்கள் நீரைப்பொழிந்து, அவரிடத்தில் தமக்குள்ள அன்பைப் பலரும் அறியச் செய்தே விடும். இதனை 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்' என்ற பாவால் உணர்த்துகின்றார் வள்ளுவனார்.

அரசியலில், அரசனது உள்ளக் கிடக்கையைத் தெள்ளிதின் உணர அமைச்சன் பெற்றிருக்கும் கருவி அவ்வரசனது கண்களே எனக் கூறுகின்றார். 'நுண்ணியம் என்பார் அளக்குங் கோல் காணுங்கால் கண்ணல்ல தில்லை பிற' என்பது குறள்.

கண்ணின் பெயரமைந்தே 'கண்ணோட்டம்' என ஓர் அதிகாரமும் குறளில் காணப்படுகின்றது. கண்ணோடுதல் என்றால் பொதுவாக இரக்கங் காட்டுதல் என்று கூறலாம். 'கண்ணோட்டம்' என்பதனை 'நாகரிகம்' எனும் பொருளிலும் எடுத்தாளுதல் உண்டு.

இரக்கங் காட்டுவதிலே ஆற்றல் படைத்த கண்ணைப் பெருமைப் படுத்தும் ஆசிரியர் 'கண்ணோட்டத்' தோடு கூடியதே கண், பிற வெல்லாம் புண்ணேயாமென எடுத்துரைத்தார்.

காதலைப் புலப்படுத்துங் கருவி கண்ணேயாம். வாய் மொழியினும் விழி மொழிக்கே ஆற்றல் உண்மையை மிக அழகுற மொழிகின்றார் வள்ளுவர். கண்களின் மொழிக்குமுன் வாய் மொழி பயனற்றதென்பார் 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில' என நயந்தோன்ற நவின்றார். நெஞ்சொடு நெஞ்சங் கலந்தமையை மொழி விளக்காது, விழியே விளக்கும்.

வீரத்துறையில் விழிகளுக்கு இடமுண்டா என்பதனைக் காண்போம். விழியே வீரத்தை வெளிக்காட்டும். வேலையும், வாளையும், வெந்தணலையும் விழிகளிலே காணலாம். போர் புரியும் திறனை, வேலின் விரைவை, வாளின் வீச்சை, அம்பின் கூர்மையை-அவையே மாற்றார்க்குச் சாற்றி முரசறையும். 'உடன்று நோக்கும் வாய் எரிதவழ நயந்து நோக்கும் வாய்பொன்பூப்ப' என்றார் புறநானூற்றுப் புலவர். 'உடன்று நோக்குதல்' என்றால் இகலுணர்ச்சி மேலிட ஒன்றைத் தேய்க்க எண்ணுதல்—அவ்வெண்ணம் புலப்படச் சினந்து நோக்குதல் என்பது பொருளாம். மனத்திலே எண்ணுவதை எண்ணிய எண்ணத்தின் விளைவாய் மாற்றார் மகிழ்வதை நோக்கும் விழிகளிலே காட்டுகின்றார், 'உடன்று நோக்கும் வாய் எரிதவழ' என்ற தொடரில். 'நன்றாக வாழ்க, நலிவு வீழ்க' என்ற எண்ணம் இதயத்திலே எழுமாயின் எழுந்த அவ்வெண்ணத்தின் விளைவாய், வளம் பொங்கி, நலம் பொங்கி, உவகை ஓங்கும்—பொலிவு தவழும் என்பதனையும் அவனுடைய விழிகளிலே கண்டு கொள்ளலாம் என்கின்றார் புலவர், 'நயந்து நோக்கும் வாய் பொன் பூப்ப' என்ற தொடரில். வீரத்தையே கண்ணாக விளக்குவார் புலவர் வள்ளுவர். வேலொழுகும் செருக் களத்தில் விழிமூடி நிற்பவன் கோழையெனக் கூறப்படுவான். வீரத்தின் திருவுருவாய் இருப்பவன் வேலைக்கண்டு விழி மூடமாட்டான். வீரஞ் சாற்றும் விழி திறந்தே செயிர்த்து நோக்கி இருக்கும். இதனை 'விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின், ஒட்டன் றோவன் கணவர்க்கு' என்ற குறட்பாவில் எழிலுற எடுத்துரைத்தார்.

இன்னணம், ஈர நெஞ்சம், வீர நெஞ்சம், கலை நெஞ்சம், காதல் நெஞ்சம் அனைத்தையும் புலப்படுத்துங் கருவி கண்ணேயாம். கவலை, துடிப்பு, சோர்வு. ஏக்கம், கிளர்ச்சி ஆகிய உணர்வு நிலைகளையும் விழிகளே வெளிப்படுத்தும். பேரணையின் மதகு வழியே நீர் பாய்தல் போல, ஆழ்ந்தகன்றோங்கிய இதயப் பரப்பின் உணர்வுவெள்ளம் பாய்ந்துவரும் பயன்சால் மதகு விழியே. இதயத்தின் எழுத்துச் சுவடியும் அஃதேயாம்.

கண்ணின் சிறப்பை இன்னும் நுனித்து நோக்குவோம். உடலிலே எப்பகுதியிலே புண் ஏற்படினும், வலிதோன்றினும் கண் நீர் சொரிகின்றது. புண்பட்ட இடத்தை, வலியுற்ற இடத்தைச் சுற்றிச் சுற்றி வந்து சோர்வடைகின்றது. ஆயின் கண்ணிற்கு ஏற்படும் துயரங்களைப்பற்றி எண்ணி வாடும் உறுப்பு வேறொன்றுமில்லை. பிற உறுப்புக்கள் கவலைப்பட்டு நீர்வடிக்காமையால் அவை இன்னலுறும்பொழுது, கண்டு களிகொள்வதோ கவலையின்றி இருத்தலோ கண்ணின் இயல்பன்று. அயலவரின் நலங்கண்டு அகமகிழும் தன்மையும் கண்ணுக்கே உண்டு. காது, கை, கால், கழுத்து, விரல், எனப்பல உறுப்புக்களுக்கும் அணிகள் அணிவிக்கின்றோம், கண்ணுக்கு அணி இல்லை. எனினும், மற்றவை அணி பூண்டிருப்பதைக்கண்டு உவகையிலே திளைக்கின்றது. அந்த மகிழ்ச்சிக்கு இணையான மகிழ்ச்சி உலகில் வேறு உண்டோ? "பிற உறுப்புக்கள் தாமே அணிபெறுகின்றன! நமக்கென்ன வாய்த்தது?" என்று கவலைப்படுவதில்லை, காழ்ப்பும் கொள்வதில்லை.

வான்புகழ் வள்ளுவர் இக்கண்ணின் இயல்பை மிக நுட்பமாக ஆய்ந்திருக்கின்றார்; கண்ணின் பெருமையருமைகளை எண்ணுவதிலே தோய்ந்திருக்கின்றார். வள்ளுவர் மற்றுமோரிடத்தில்முற் கூறிய காதல், வீரம், ஈரம், அமைச்சு, அன்பு ஆகியவற்றிற்கெல்லாம் அடிப்படையான இடத்தில் கண்ணை நமக்குக் காட்டுகின்றார். பண்பனைத்தின் சுரங்கமாகிய கல்வியைக் காட்டுகின்ற காலை வள்ளுவர், 'பாருங்கள் கண்ணின் பெருமையைப்; பற்றுங்கள் அதன் இயல்பை' என்றுரைப்பதுபோல மிகத்திறம்படக் கூறுகின்றார். "கல்வியே கண்! மறவாதீர்! துறவாதீர்!" என முரசறைந்து முழக்குகின்றார்.

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்'

'கண்ணுடையவரென்ற பெருமைக்கு உரியவர் கல்வி உடையவரே! கல்லார் முகத்திலிருப்பன இரண்டும் கண்ணல்ல, புண், புண், புண்ணே!' என்கின்றார் பொதுமறை வகுத்த புலவர். கல்வியைக் கண்ணென்றுதான் கூறுகின்றார். உண்கின்ற வாயாக, ஒலியுணருஞ் செவியாக, முகரும் மூக்காகக் கூறவில்லை. ஏனெனில், கண்ணின் தன்மை நன்மைகளைக் கசடற உணர்ந்தவர் வள்ளுவர். கல்வியின் இயல்பு கண்ணின் இயல்பாக இருக்கவேண்டும் என்று கருதுகின்றார். மீண்டும் கண்ணின் இயல்புகளை உளங்கொண்டு, அவற்றைக் கல்விக்கு ஏற்றிப் பார்ப்போம். அப்பொழுதுதான் வள்ளுவர் உள்ளம் நமக்கு வெள்ளிடை மலையாகும்.

கண் வழியறிந்து உடலியங்க உறுதுணை புரிவதுபோல் வாழ்விலே நன்மை தீமைகளை அறிந்து தீதகற்றி நன்றின் பாலுய்ப்பதாகிய பெரும்பணிபுரிவது அறிவேயாம். அகத்தின் கண் கல்வியேயாம். உடலின் ஓர் உறுப்பு கண். மக்கட் கூட்டத்தின் ஓர் உறுப்பே தனிமனிதன். உடலோடு கண்ணிற்குள்ள தொடர்பு, மனிதவினத்தோடு மனிதனுக்கு இருக்கவேண்டும்.

இனி, கல்வியாகிய கண்பெற்றோர் எவ்வாறு கண்ணின் பணி புரிகின்றார் என்பதனைப் பார்ப்போம் கல்விக் கண்ணுடையார் பிற உயிர்களைத் தம் உயிரினும் சிறந்தவென எண்ணுவர். பிறர் இடர் உறுவதைக்கண்டு கவலையுற்றுக் கண்ணீர் வடிப்பர். தொடர்பற்றவர் தாமே எனத் தூர விலகிச் செல்லார். வேண்டாதவர் தாமே என வெறுப்புக் கொள்ளமாட்டார். அவர் இன்னல் கண்டு இதயங் களிக்கமாட்டார். 'எவர் நிலை என்னவாயின் எமக்கென்ன?' என்று பொறுப்பற்றுத் 'தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, ஊதியம் இவையுண்டு தானுண்டு' என்ற கடுகு எண்ணம்கொள்ள மாட்டார். துன்பப்படுவோர் துயரம் பொறுக்கார்; துடிதுடித்தோடித் துணைசெயப் புகுவார். பிறரின் துயரைத் தமக்குற்ற துயராக எண்ணி வாடி வருந்தி அதனைக் களைய முனைவதே அறிவுக் கண் பெற்றோரின் செயலாகும். 'நாம் இன்னலுற்றகாலை இவரென்ன துணை புரிந்தார், யாம் இவருக்கு இதுகாலைத் துணைசெய்ய' என்று எண்ணுதல் அவர் தம் செயலன்று! இன்பம் தமக்கென எதையும் வேண்டார். யாவரும் நலமுறச் சேவைகள் பூண்டார் என்னும் உரை அவருக்கே சாலப்பொருந்தும். அம்மட்டோ! கை, சிலகாலை தவறிக் கண்ணைக் குத்திவிடுதலும் உண்டு. அதனை உட்கொண்டு கை துயருறும்பொழுது களிப்படைவதோ, கவலையுறாமல் இருப்பதோ கண்ணின் இயல்பன்று, உடனே நீர் பொழிகின்றது. வருந்திச் சோர்கின்றது. கல்விக் கண்ணுடையோர் இன்னாசெய்தாருக்கும் இனியவே செய்வர். அதுவன்றோ சால்புடைமை! கண்ணுடைமை!

கல்விக்கண்ணுடையோரின் இயல்பும் இஃதேதான்! 'இரக்கத்திற்கு உரியவன். ஏதேனுங்கொடு! அதோ, அங்கமெல்லாம் நோய்! அவனுக்கு உதவு! நீ அடுத்த வேளை உண்ணலாம், இருப்பதை இப்பொழுதே கொடு! குழந்தை வாடுகின்றது! அதன் பிஞ்சு விழிகளைப்பார்! உன் உள்ளம் மரமா, கல்லா! மறுக்காதே, அள்ளிக் கொடு! அதோ அத்தையலைக் காண்! உன் நெஞ்சம் இளகவில்லையா! உன் உடன் பிறந்தவள், உயிர் போகும் நிலையிலிருக்கின்றாள்! உதவு! உதவு! 'என்றெல்லாம் அறிவுக்கண் இதயத்தைத் தட்டித் தட்டி யெழுப்பி, எண்ணத்தைத் தூண்டி விடுகின்றது' தம்மாலான பணிபுரியத் தயங்காமல் முன் வந்து முனைகின்றது உள்ளம். வற்றிய வாழ்வுப் பொய்கையில் வளமான புனல் நிரம்பி, அல்லியும் தாமரையும் அழகாய்ப் பூத்துக் குலுங்க, அதனைக் கண்டு கண்டு உவக்கின்றது. தம் இல்லாமை பற்றியோ, இன்னல்கள்

பற்றியோ எண்ண ஒய்வேது அவருக்கு! மற்றவருக்குப் பணி புரிவது, புரிந்த பணியால் விளைந்த நன்மையைக் கண்டு பேருவப்பும் பேரமைதியும் கொள்ளுவதே அவர்தம் வாழ்வு!

'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே'
'எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே!'

என்னும் பாடல்களை அவர்களது பண்பார்ந்த நா பாடிக்கொண்டே இருக்கும். பிறர் வளன் கண்டு, பொறுமை கொள்ளுதலோ, வஞ்சித்துக் கவர நினைத்தலோ அவரியல்பாகா! கண்ணுக்கு இவ்வியல் பெல்லாம் உண்டோ!

கல்வியின் இயல்பையும் கண்ணின் இயல்பையும் தம் நுண் மாண் நுழை புலத்தால் எழிலுறக் காட்டிய வள்ளுவர்தம் வாய்மொழி வியப்பின் எல்லையை விஞ்சுவதாம். 'கண்ணுடையோர் கற்றோர், புண்ணுடையோர் கல்லாதார்' என்னும் அவருரை அறிவார்க்குச் சிந்தனையில் தேனூற்றைப் பெருகச் செய்யும், அறிவை விரியச் செய்யும். அறிவோடு பொருந்தாத சொல்லைக் 'கண்மூடித் தனமான' சொல்லென்றே மக்கள் கூறுவர். காதற்ற பேச்சென்றோ! மூக்கற்ற மொழி யென்றோ சொல்வாரில்லை.

ஓடாத கண்ணை—இரக்கத்தை வெளிக்காட்டாத கண்ணை, களிப்பைத் தெரிவிக்காத கண்ணை-குறிப்பை உணர்த்தாத கண்ணை, வீரத்தை வெளியிடாத கண்ணை-அன்பைப் புலப்படுத்தாத கண்ணைக் கண்ணென்று யாரே உரைப்பர்! அதேபோலப் பிறர்பால் நெஞ்சுருகி ஓடாத அறிவை—பிறர் துயர் கண்டு துடிக்காத அறிவை—தன்னலந் துறந்து பிறர் நலன் பேணாத அறிவை—அன்பற்ற அறிவை—அருளைப் பொழியாத அறிவை அறிவென்று யாரே ஒப்புவர்! அவ்வறிவைப் பெருக்கும் கல்வியும் கல்வியாமோ! பொய்யும் போலியுமான அக்கல்வி என்ன பயன் விளைக்கும்?

எனவே, வள்ளுவன் வரையறுக்கும் கண்ணியல்புக் கல்வியே கல்வி! பிறவெல்லாம் கல்வியாகா. வள்ளுவர் விளக்கும் கல்விக் கண்ணே வாட்டம் போக்கி வளங்கூட்டும். அத்தகைய கல்விக் கண் நாடெல்லாம் வீடெல்லாம் மலர்வதாக!

மண்ணாசை கொண்ட மன்னர்கள்.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனார்.

"நீ சோழர் குடியிலே பிறந்தவன்; உனது முன்னோர், ஒரு புருவின் துயரத்தை நீக்கியதோடு நிற்கவில்லை; வேறுபல துன்பங்களையும் தீர்த்தவர்கள். இக்குழந்தைகளோ, புலவர்களின் வறுமையைக் கண்டால் அதை ஒழித்து, தம்மிடம் உள்ளதைப் பிறர்க்கும் பகுத்துக் கொடுத்து உண்ணும் மரபிலே பிறந்தவர்கள். யானையைக் கண்டால் பயந்து அழுகின்ற பருவத்தைக்கூட அடையாதவர்கள்; அவ்வளவு இளம்பருவமுள்ளவர்கள். இந்த இடம் புதிதாக இருக்கிறதே என்று பார்த்து வருந்துகின்றவர்கள். நான் சொல்லும் இவ்வுண்மையை நீ ஆராய்ந்து பார்: பிறகு உன் விருப்பப்படி செய்.

நீயே புறவின் அல்லல் அன்றியும், பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே, புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சித்
தமது பகுத்துண்ணும் தண் நிழல் வாழ்நர்;
களிறு கண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர்; மன்று மருண்டுநோக்கி
விருந்தில் புன்கண்நோ உடையர்;
கேட்டனை ஆயின், நீ வேட்டது செய்ம்மே".

கிள்ளி வளவன் செய்யத் தொடங்கியது படுபாதகம் என்பது அனைவர்க்கும் தெரியும். அதைத் தடுக்க அவனுடைய அமைச்சர்கள் யாரும் முன்வரவில்லை. புலவர்தான் துணிந்து முன்வந்தார். அவரும் 'நீ இந்த அநீதியைச் செய்யாதே' என்று அடித்துப் பேசவில்லை. 'நான் சொல்வதைக் கேட்பதானால், இதைச் செய்யாதே, கேட்காவிட்டால் உன் மனம்போல் செய்' என்றுதான் வேண்டிக்கொள்கின்றார். 'கேட்டனை ஆயின், நீ வேட்டது செய்ம்மே' என்ற அடி இக்கருத்தையே கொண்டதாகும்.

கொடுங்கோல் மன்னன்.

நன்னன் என்பவன் ஒரு சிற்றரசன்; சிற்றரசனாயினும் பண்டை நாளில் அவன் ஆண்ட நாட்டில் அவனுக்கு எல்லா அதிகாரமும் உண்டு; மக்களைத் தன் எண்ணப்படி ஆட்டிவைக்கும் உரிமை

யுண்டு. இந்த நன்னன் ஒரு சிறு குற்றத்திற்காக ஒரு பெண்ணைக் கொலை செய்தான் என்ற வரலாறு ஒன்று வழங்குகின்றது. இதைக் குறுந்தொகையிலும் காணலாம்; புறநானூற்றிலும் காணலாம்.

"நன்னன் என்பவன், ஆற்றங்கரையில் இருந்த தன் தோட்டத்தில் அரிய மாமரம் ஒன்றை வளர்த்து வந்தான். அதன் காயையோ பழத்தையோ அவனைத் தவிர வேறொருவரும் தின்னக் கூடாது என்பது அவன் ஆணை. ஒரு நாள் ஒரு பெண் ஆற்றுக்கு நீராடப்போனாள். ஆற்றிலே மாங்காய் ஒன்று மிதந்து வந்தது. அதை எடுத்து அவள் தின்றுவிட்டாள். உடனே காவலர்கள் அவளைப் பிடித்துக்கொண்டுபோய் அரசன்முன் நிறுத்தினர். அரசன் அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். அவள் தந்தை பணக்காரன். கொலைத் தண்டனையிலிருந்து மீட்க எவ்வளவோ முயன்றான். அப்பெண்ணின் நிறையுள்ள பொன் பதுமையும், எண்பத்தொரு யானையையும் ஈடாகக் கொடுத்தான். அதற்கும் அரசன் இணங்காமல் ஒரு மாங்காய்க்காக அவள் உயிரை வாங்கிவிட்டான்".

இவ்வரலாற்றைக் குறுந்தொகையின் 292-வது செய்யுளிலே காணலாம்.

'மண்ணிய சென்ற ஒள்நுதல் அரிவை,
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு,
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன்.

நீராடும்பொருட்டுச் சென்ற பெண் நீரிலே மிதந்து வந்த பசுமையான மாங்காயை எடுத்துத்தின்ற குற்றத்திற்காக, எண்பத்தொரு ஆண் யானைகளும், அவள் அளவு நிறையுள்ள பொன்னாற் செய்த பதுமையும் ஈடாகக் கொடுக்கவும் அதை ஏற்றுக்கொள்ளாமல் பெண்ணைக் கொலை புரிந்தான் நன்னன்." இதுவே அக்குறுந்தொகைப் பாடல். இவ்வரலாறு புறநானூற்றின் 151-வது பாடலிலும் குறிக்கப்பட்டுள்ளது. இப்பாடல் பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவரால் பாடப்பட்டது.

இளங்கண்டீரக்கோ என்னும் சிற்றரசனும், இளவிச்சிக்கோ என்னும் சிற்றரசனும் ஒன்றுகூடியிருந்தனர். அப்பொழுது பெருந்தலைச்சாத்தனார் சென்றார். அவர் இளங்கண்டீரக்கோவைத் தழுவிக்கொண்டார். இளவிச்சிக்கோவைத் தழுவிக்கொள்ளவில்லை. அப்பொழுது இளவிச்சிக்கோ புலவரைப்பார்த்து "இளங்கண்டீரக்கோவைத் தழுவிக்கொண்ட நீர் என்னை ஏன் தழுவிக்கொள்ளவில்லை" என்று கேட்டான். உடனே புலவர் இளவிச்சிக்கோவைப் பார்த்துக் கீழ்வருமாறு கூறினார்.

"இளங்கண்டீரக்கோ தன்னைப் பாடும் புலவர்க்குப் பரிசில் அளிப்பவன்; அவன் இல்லாவிட்டாலும், அவனைப் பாடி வந்த புலவர்க்கு, அவன் பெண்டிரும் தமது தரத்திற்கேற்ப நன்கொடையளிப்பார்கள். ஆதலால் அவனைத் தழுவிக்கொண்டேன். நீயோ பெண்கொலை புரிந்த நன்னன் மரபிலே தோன்றியவன்; அன்றியும் பாடுநர்க்குப் பரிசில் வழங்காமல் கோட்டை வாசலை அடைத்திருப்பவன். ஆதலால் உன் மலையைப்பற்றிப் புலவர்கள் பாடாமல் நீக்கினர். இக்காரணத்தால்தான், தழுவிக்கொள்ளத் தகுந்தவனாயினும் உன்னை நான் தழுவிக்கொள்ளவில்லை" என்று இவ்வாறு கூறினர். இவ்வரலாற்றை இப்பாட்டின் அடிக்குறிப்புத் தெளிவாக உணர்த்துகின்றது.

> "இளங்கண்டீரக்கோவும், இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்தவழிச்சென்ற பெருந்தலைச் சாத்தனர், இளங்கண்டீரக்கோவைப் புல்லி, இளவிச்சிக்கோவைப் புல்லாராக, 'என்னை என் செயப் புல்லீர் ஆயினீர்' என அவர் பாடியது".

இதுவே அந்த 151-வது பாட்டின் அடிக்குறிப்பாகும். ஒரு சிறிய மாங்காய்க்காக, ஒரு பெண்ணின் அரிய உயிரை வாங்கியதற்குக் காரணம் அதிகாரவெறியைத் தவிர வேறென்ன ?

குழந்தைகளின் உயிரை வாங்கத் துணிந்த கிள்ளிவளவன் செயல்; மாங்காய்க்காகப் பெண்ணின் உயிரை வாங்கிய நன்னன் செயல்; இரண்டும் படுபாதகச் செயல்கள்; அதிகாரவெறியிலே முளைத்தெழுந்த அடாத செயல்கள்.

தனி அதிகார வெறியால் நாட்டிலே அடிக்கடி போர் நடைபெற்றது. அதனுல் நாடு நாசமடைந்தது; மக்கள் செல்வங்கள் பாழ்பட்டன. தனி அதிகாரச் செருக்கால் அறத்தைச் சிதைத்தனர்; மனம்போனவாறு நடந்துவந்தனர். பல அரசர்கள் நீதி நெறியைப் பின்பற்றி நடந்துங்கூடச் சில அரசர்கள் இவ்வாறு அடாநெறிகளைப் பின்பற்றியதனுல், மக்கள் தனி அதிகார முறையை வெறுத்தனர். அரசர்கள் அமைச்சர்களுக்கும், அறிஞர்களுக்கும் அடங்கித்தான் வாழவேண்டும்; அவர்கள் அறிவுரைகளைக் கேட்டுத்தான் ஆட்சி புரியவேண்டும் என்று நினைத்தனர். மன்னர்களின் தனி அதிகார ஆட்சியைவிட, மக்களின் கருத்தைப் பின்பற்றி நடத்தும் மன்னர் ஆட்சியே சிறந்தது என்று எண்ணினர். பழந்தமிழ்ப் புலவர்கள் இக்கருத்தை மக்களிடையிலே பரப்பி வந்தனர். [அடுத்த பகுதியில் இக்கருத்தைக் காண்போம்.]

(தொடரும்)